பக்கங்கள் 10

Registered as a Newspaper

# சஞ்சீவி

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

விலை ரூபா 2-50

88 A/L
Paper Class
(Sat & Sun)
ஆரம்பமாகிவிட்டது
Physics - Mr. Varnam
Chemistry - Mr. Thillainathan
Botany - Mr. Kugatharan
Zoology - Mr. Naganathan
New Master Institute
241, Navalar Rd, Jaffna.

88 A/L
Paper Class
(Sat & Sun)
9. 30 - Botany
10. 30 - Zoology
11. 30 - Chemistry
12 30 - Physics
New Master Institute
241, Navalar, Rd, Jaffna.

மலே: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 13உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 06 (26—03—1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 04

# இலங்கைத் தமிழர் மீது தமிழகத்தில் கடும் சோதனை

## உரிய பத்திரங்கள் இல்லாத பலரும் கைது

— சென்னையிலிருந்து எமது சிறப்புப் பிரதிநிதி ந வித்தியாதரன் —

சென்னை, மார்ச் 26

தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் மீது இந்த வாரத்தில் கடும் சோதனைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந் நடவடிக்கையின்போது அகதிகளாகப் பதிவு செய்ததற்கான அடையாள அட்டை ஸ்ரீலங்கா பாஸ்போட் அல்லது அவசரப் பயணச் சான்றிதழ் ஆகிய பத்திரங்களில் ஏதாவது ஒன்றேனும் இல்லாத இலங்கைத் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

தமிழகத்தில் தங்கி இருக்கும் இலங்கைத் தமிழர்கள் கடும் சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். இந்த வாரத்தில் சோதனைகள் தீவிரமாகமுடுக்கி விடப்பட்டுள்ளன.

அகதிகளாகத் தங்கிப் பதிவு செய்து அதற்கான அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாதோர், பாஸ்போட் அல்லது அவசரகாலசான்றிதழ் முதலிய பயண தஸ்தாவேஜுகளை வைத்திருக்கவேண்டும்.

அப்படி யில்லாமல் தமிழகத்தில் நடமாடும் ஈழத்தமிழர்களை தேடிப் பிடித்துக் கைதுசெய்யும் முயற்சியில் இந்திய மத்திய அரசின் எவ்.பி ஐ பிரிவினரும், பொலீஸாரும் ஈடுபட்டிருக்கின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அடையாறு பெசண்ட் நகர், சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளில் இத்தகைய தேடுதல் வேட்டைகள் நடத்தப்பட்டன சிலர் கைது செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

(அ-உ)



எலுமிச்சை மரத்தை உருவாக்க மண்வளம் இல்லை என்று இனி எவரும் சொல்ல முடியாதபடி, தென்னை மரத்தில் இருந்து எலுமிச்சை மரத்தை உருவாக்கி சாதனை புரிந்திருக்கிறார் வட மராட்சி விவசாயியான திரு. எம். ஏ. மகாலிங்கம்.

நிறைந்த பலன் தரக்கூடிய இந்த எலுமிச்சை மரம் தென்னையில் வேரூன்றி வளர்ந்திருப்பதை படத்தில் (வட்ட மிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது) காணலாம்

(படம்:- வடமராட்சிச் செய்தியாளர்)

## கருத்துக்கலசம்

### அவசரமும் ஆறுதலும்

அவசரமும் ஆறுதலும் ஒன்றுக்கு மற்றது நேர்மாறானது வாழ்க்கையில் எல்லாவற்றுக்கும் அவசரப்படுவோரும் உள்ளனர்; அதே போல கருமங்களை ஆறுதலாகச் செய்வோரும் இருக்கிறார்கள்.

எடுத்த கருமத்தை அல்லது ஒரு காரியத்தை அவசர அவசரமாகச் செய்வது நல்லதா அல்லது ஆறுதலாக ஆற்றுவது நற்பயன் தருமா என்பதில் கருத்து வேற்றுமை நிலவுவது சகஜம்.

அவசரப்பட்டுச் செய்யும் காரியம் உரிய பயனைத் தராது. அதன் நீண்ட கால விளைவு, காரியத்தின் நோக்கத்துக்கே பாதகமாக அமைந்து விடலாம், அவசரத்தில் ஆற்றப்படும் பணிகள் சிறப்பாகவும், பூரணத்துவமாகவும், தரமுள்ளவையாகவும் அமைய மாட்டா என்பது ஒரு கருத்து.

இப்போதைய மனித வாழ்க்கை வேகம் மிக்கது. அந்தக் கால ஓட்டத்துக்கு ஈடுகொடுக்க வேண்டுமெனில் கருமங்கள் வேகமாகச் செய்யப்பட வேண்டும் என்பது ஒரு வாதம் அந்த வேகத்துக்கு அவசரம் அவசியமானது என்றும் கூறப்படுகிறது காரியங்களை அவசரமாகச் செய்யாமல், நேரம் எடுத்து ஆய்ந்து, ஓய்ந்து ஆற்றினால் வாழ்க்கையில் முன்னேற முடியாது பின் தள்ளப்பட நேரிடும் என்பதும் முந்திய கருத்துக்குத் துணைவாதமாகத் திகழ்கிறது.

இவை போலவே கருமங்களை ஆராய்ந்து, தீர ஆலோசித்து, திட்டமிட்டு, வேண்டிய நேரமெடுத்துச் செய்வதனால் ஏற்படும் விளைவுகள் குறித்து சாதகமாகவும் பாதகமாகவும், கருத்துக்கள் கூறப்படுவது உண்டு.

ஆனால் அவசரமும், ஆறுதலும் சந்தர்ப்பசூழ்நிலைகளைப் பொறுத்து சமயோசிதமாகக் கைக்கொள்ளப்பட வேண்டியவை. காரியத்தின் தன்மை, அதன் முக்கியத்துவம் கருதியும், சந்தர்ப்ப சூழ் நிலைகளைப் பொறுத்துச் சில காரியங்கள் அவசரமாகவே செய்யப்பட வேண்டியிருக்கும். அதே போலச் சில அலுவல்கள் ஆற அமர யோசித்து தக்கபடி, உரியநேரத்தில் செயலுருக் கொடுக்கவேண்டியவையாக இருக்கும்.

அவசரமும், ஆறுதலும் சரியாக, சமயோசிதமாகக் கையாளப்படாவிடின் பல ஆபத்துக்களும், வேண்டாத விளைவுகளும், நஷ்டங்களும், கஷ்டங்களும் உண்டாவது நிச்சயம்.

இது வெறும் தனி மனிதவாழ்க்கைக்கு அல்லது ஒரு சமூக வாழ்க்கைக்கு மட்டுமன்றி, நாடளாவிய மட்டத்திலும், உலகளாவிய மட்டத்திலும் பொருந்தும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

26-03-1988
பங்குனி 13
சனிக்கிழமை

சுபநேரம்:
3.14 முதல் 4.44 வரை
ராகுகாலம்:
9.14 முதல் 10.44 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி இரவு 4.23 வரை
ஸ்ரீ ராம நவமி

## யாழ் பஸ் நிலையத்தினுள் தனியார் வாகனம் செல்லத் தடை

யாழ்ப்பாணம், மார்ச்26

யாழ்ப்பாணம் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் நிலையத்திற்குள் தனியார் வாகனங்கள் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

இதன்படி தனியாருக்குச் சொந்தமான எந்த வாகனமும் பஸ் நிலையப் பகுதிக்குள் செல்வது நேற்றைய தினம் முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடை அறிவிப்பை உதாசீனம் செய்து பஸ்நிலையத்திற்குள் நுழைந்த தனியார் வாகனங்களின் வாகன அனுமதிப் பத்திரங்கள் (பாஸ்) அமைதிப் படையினரின் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டன. (ஒ-9)

## மினிபஸ் போக்குவரத்துச் சங்கம் அங்காடி வியாபாரிகளை அகன்று செல்லுமாறு கேட்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ் நகரின் பஸ் நிலையச் சுற்றுடல் பகுதிகளில் தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை விட்டு அங்காடி வியாபாரிகளை அகன்று செல்லுமாறு வடபிராந்திய மினி பஸ் போக்குவரத்துச் சங்கம் கேட்டுள்ளது.

கடந்த ஒருசில நாட்களாக நகரின் பஸ் நிலையத்திற்குள்ளும். பஸ் நிலையத்தின் சுற்றுப்புறங்களிலும் மினி பஸ்கள் நிறுத்துவதை இந்திய அமைதிப் படையினர் தடை செய்ததை அடுத்தே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அமைதிப் படையினரின் இந்நடவடிக்கையால் மாநகரசபையால் கடந்த வருடத்தில் ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு மினி பஸ்கள் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

ஆனால் அந்த இடங்களில் அங்காடிவியாபாரிகள் வியாபாரம் மேற்கொண்டிருப்பதனாலேயே மினி பஸ்கள் பஸ் நிலையத்தினுள் தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே அங்காடி வியாபாரிகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றுவிட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வட பிராந்திய மினிபஸ் போக்கு வரத்துச் சங்கம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. (ஒ-9)

## கிளிநொச்சியில் நேற்று அடையாள உண்ணாவிரதம்

கிளிநொச்சி, மார்ச் 26

சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக் கோரி அடையாள உண்ணாவிரதம் ஒன்று நேற்று கிளிநொச்சி கச்சேரியில் மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி கச்சேரி முன்பாக நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட சுமார் 35 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு ஆதரவாக வேறு பல இளைஞர்களும் பொதுமக்களும், யுவதிகளும் உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டனர். (ஒ 76)

## ஜி. சி. ஈ. பரீட்சை: பிரமுகர் குழு ஒன்று கொழும்பு செல்லும்

யாழ்ப்பாணம், மார்ச் 26

தடைப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை சம்பந்தமாக பேச்சு நடத்த பிரமுகர் குழு ஒன்று கொழும்பு செல்ல உள்ளதாக அறியவருகிறது.

இக்குழு கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளைச் சந்திக்க உள்ளதாகவும், கடந்த 1987 இல் தடைப்பட்ட ஜி. சி. ஈ. பரீட்சையை விரைவில் நடத்தக் கோர உள்ளதாகவும் தெரியவருகிறது.

இப் பரீட்சையை இங்கு நடத்த வேண்டிய அவசியத்தையும், பரீட்சை நடத்தப்படாத விடத்து ஏற்படப் போகும் விபரீத விளைவுகளையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு இக்குழு விளக்கும் எனவும் தெரியவருகிறது.

மேற்படி குழு அடுத்த வார முற்பகுதியில் கொழும்பு செல்ல உள்ளதாகவும் இக்குழுவில் முன்னாள் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பொது ஸ்தாபன அங்கத்தவர்கள் மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'பாஸ்' இன்றி ஓடும் வாகனங்கள் பறிமுதல்

### அமைதிப் படை அறிவிப்பு

அனுமதிப் பத்திரம் (பாஸ்) பெறாமல் வீதிகளில் ஓடும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று யாழ். நகர அமைதிப்படைத் தளபதி அலுவலகம் அறிவித்து இருக்கின்றது.

அலுவலகம் இது சம்பந்தமாக விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

அனுமதிப் பத்திரம் பெறாமல் வாகனங்கள் வீதிகளில் ஓடுவதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது:

அனுமதிப் பத்திரம் பெறாது வாகனங்கள் வீதிகளில் ஓடுவது கண்டு பிடிக்கப்பட்டால் அவை உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும்.

நாளை மறுதினம் திங்கள்முதல் அனுமதிப்பத்திரம் பெறாமல் ஓடும் வாகனங்கள் பறிமுதல்செய்யப்படும்.

—இப்படிச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## கறுப்புப் பட்டி

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் இவ்வாரம் 21ஆம்திகதி முதல் 25ஆம் திகதி வரை கறுப்புப் பட்டி அணியும் இயக்கம் ஒன்றை நடத்தினர்.

## காட்மண்டுவில் உலக இந்து மாநாடு

காட்மண்டு, மார்ச் 26

இரண்டாவது உலக இந்து மாநாடு நேற்று காட்மண்டுவில் ஆரம்பமானது.

மூன்று நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டை நேபாள மன்னர் பிரேந்திரா அங்குரார்ப்பணம் செய்தார்.

19 நாடுகளைச் சேர்ந்த சமயத் தலைவர்கள், மத குருமார்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இந்தியக் குழுவில் காஞ்சி சங்கராச்சாரிய ஜெயேந்திர ஸ்வாமிகள் இடம் பெற்றிருக்கின்றார். 'உலக சமாதானத்தின் ஒற்றுமைக்கு இந்த சமயத்தின் பங்கு' — என்ற தலைப்பில் ஆய்வு ஒன்று இம் மாநாட்டில் நடத்தப்படும்.

(ஒ-எ)

## தமிழர் அமைப்புகள் இடம் மாறுகின்றன

தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறை வந்ததை அடுத்து தமிழகத்தில் தங்கியிருந்த ஈழத்தமிழர் அமைப்புகள் சில தமது அலுவலகங்களையும்வதிவிடங்களையும் தமிழகத்துக்கு வெளியே இடம்மாற்றிவருவதாகக் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அமைப்புகள், தமது முக்கிய உறுப்பினர்களில் பெரும்பாலானோரையும் தமிழகத்துக்கு வெளியே ஈழத் தமிழருக்கு ஆதரவு அதிகம் உள்ள இடங்களுக்கு அனுப்பத் தொடங்கியுள்ளன.

தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கெடுபிடிகள் அதிகமாக இருக்கும் என எதிர்பார்த்தே இவ்வமைப்புகள் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகச் சொல்லப்படுகிறது (அ-உ)

## ஜனாதிபதிக்கு குண்டு பாயாத பென்ஸ் கார்

கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக குண்டு துளைக்காத இரண்டு பென்ஸ் கார்கள் கடந்த வாரம் இறக்குமதி செய்யப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை இரண்டு பென்ஸ் கார்களும் ஜனாதிபதி மாளிகையில் ஒப்படைக்கப்பட்டன.

இரண்டு கார்களின் மொத்தப் பெறுமதி சுமார் ஒரு கோடி 40லட்சம் ரூபா என்று சொல்லப்படுகின்றது. (ஒ-எ)

## தொலைக்காட்சியில்

"இலங்கைத் தமிழர் சேவையில் இந்திய அமைதிப்படை" என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி இன்று 26ஆம் திகதி மாலை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்,

இந்திய அமைதிப் படையின் பத்திரிகைக் குறிப்புஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் அரிய சந்தர்ப்பம்!
தவற விடாதீர்கள்!!

கலர் படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்!

- கலர் பிரதி ஒன்றுக்கு ரூபா 4/75 மட்டுமே
- தரமான பிரதி
- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்:
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ர' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு

தொடர்பு:
SHABRA
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Prima Quality Chicks Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். புரேயிலர் குஞ்சுகள், Golden Caments சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hy – Line, வெள்ளை சறுப்பு பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமை, சனிக்கிழமையில் விநியோகிக்கப்படும். உடன் பதிவு செய்யவும். Nallur Farm Centre C/o நல்லூர் விடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (1988)

Uplands Farm Ltd கோழிக்குஞ்சுகள் 29-03-88 செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும் (Lohmann) பிறவுன் பேடு ரூ 12. 50 [Lohmann]சேவல் ரூ4.00 (சொண்டு வெட்டப்பட்டது, தடுப்பூசி போடப்பட்டது) முன் கூட்டியே பதிவு செய்யவும். இல 9, சூராவத்தை ரோட்டு [நந்தையா லேன்] சுன்னாகம் [ஸ்டேசனுக்கு அண்மையில்] (2655)

கடைகளுக்கு ஏற்ற புதிய கண்ணாடி, சோட்கேசுகள், இருக்கைகள், வீடியோ படப்பிரதிகள், பாட்டுக்கசட்டுக்கள், ஸ்பீக்கர்கள், மின் உபகரணங்கள் விற்பனைக்குண்டு ஞாயிற்றுக்கிழமை வரை பார்வையிடலாம் 9, அரசடி, ஒழுங்கை, நெடுங்குளம் வீதி. அரியாலை (2668)

சேதமடைந்த மூளாய் படமாளிகைக் கட்டிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. விஸ்வலிங்கம் ''யமுனா'' ஆனைக்கோட்டை. (2147)

மலைநாட்டு ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி பொது அறிவு பொது உளச்சார்பு'' வெளியீடு அஸ்ரன் பதிப்பகம் விலை ரூபா 49, 90 பூபாலசிங்கம், சிறீலங்கா; சுப்பிரமணிய, புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (2143)

Hi Laine முட்டை இடும் ஒரு நாள் கோழிக்குஞ்சு விற்கப்படும். சிமாட்டி பாம்ஸ் ஸ்ரேசன் ரோட் மயிலங்காடு சுன்னாகம். (2149)

சொந்தபாவிப்பிலிருக்கும் நல்ல நிலையிலுள்ள National RXC 45 Double Speaker Radio Cassette recorder விற்பனைக்குண்டு. தொடர்பு: ராதா, 21, வேம்படி ரோட் யாழ்ப்பாணம். (2173)

அழகிய உயர்ந்த ஜாதி போம்மனேரியன் ஆண், பெண் சோடி நாய்க்குட்டிகள், தடுப்பூசி ஏற்றப்பட்டவை. அ. அரசகுலசேகரன், டச்சுவீதி, சங்குவேலி. (2163)

### காணி விற்பனை

மீசாலை A. P. C. கந்தோருக்கு முன்னால் 13 பரப்பு காணி விற்பனைக்குண்டு கிணறு, மலசல கூட வசதி, மற்றும் பிரயோசனங்களும் உண்டு. தி. தாமோதரம் பிள்ளை உரும்பராய் கிழக்கு. (2129)

அளவெட்டி தெற்கில் உள்ள நெசவு தொழிற்சாலை அருகில் 8 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு M. ஜெயராஜசிங்கம், ''சிநெல் இல்லம்'' (பிள்ளையார் கோவில் அருகில்) மானிப்பாய் வீதி, உடுவில். (2678)

### தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவம் உள்ள ஆண் விற்பனையாளர் தேவை. சிமாட்டி யாழ்ப்பாணம். (2149)

## தேவை

பழுதடைந்த ரெலிவிசன். திருத்த முடியாத ரெலிவிசன், விடியோ டெக் உடன் தேவை விபரங்கட்கு Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். (2121)

மோட்டர், ரான்ஸ்போமர் றீவைண்டிங் பழக ஆர்வமுடையவர்கள் இப்பொழுது உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். ஓரளவு மின்சார அறிவு உடையவர்களுக்கு முன் உரிமை உண்டு Omega Manipay Road, Jaffna. (2676)

ஆண்டு பதினொன்றுக்கு உட்பட்ட வகுப்புக்களுக்கு கணிதம், விஞ்ஞானம் கற்பிக்க விரும்பும் பகுதிநேர ஆசிரியர்கள் தேவை. தகுதி, சம்பளம் ஆகியவற்றை குறிப்பிட்டு விண்ணப்பிக்க. மதி அக்கடமி. ஊரெழு, சுன்னாகம். [2675]

பரந்தன் Y. M. C. A இளைஞர் பயிற்சி நிலையத்திற்கு ஆங்கில தட்டச்சுத் தெரிந்த கணக்குப் பதிவு செய்யக்கூடிய ஆண் லிகிதர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 31-3-88 காரியதரிசி Y M. C. A யாழ்ப்பாணம்.

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவமுள்ள நெசவாளர் தேவை. உடன் நேரில் வரவும். தெல்லிப்பளை மின்தறி நெசவு நிலையம், ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பளை. (2168)

நன்கு அனுபவமும் திறமையுமுள்ள Salesman தேவை (விற்பனையாளர்) ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது தங்குமிட வசதிகளுடன் சம்பளமும் வழங்கப்படும். நேரில் வரவும். Saffarces, கண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகாமை, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (2174)

தற்பொழுது காலியாக இருக்கும் ஒரு வீட்டை தனது வீடு போல் நினைத்து பராமரிப்பதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட நற்குணமுள்ளதும், வேறு பொறுப்புகள் அற்ற பெண் தேவை. சகல வசதிகளும் இலவசமாக வழங்கப்படும் மேலும் விபரங்களுக்கு:- ராதா, 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (2172)

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்திலிருந்து ½ கிலோ மீற்றர் தொலைவினுள், குறைந்தது 4 அறைகளுடன் கூடிய வீடு ஒன்று கணக்காளர் முகாமைத்துவக் கம்பனி ஒன்றுக்கு தேவை. Business Promoters (pvt) LTD. 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

லீவில் வரவிருக்கும் லண்டனில் நிரந்தர விசா சொந்த வீடுள்ள 32 வயது 5' 6'' உயரமுள்ள சைவ போசன B. Sc. Engineer மெல்லிய அழகான I. C.M.A அல்லது B. Com. சித்தியடைந்த மணமகளை எதிர்பார்க்கிறார். முழுவிபரங்கள் சாதக குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல- 97- C/O உதயன். (2141)

வெளி நாட்டில் தொழில் புரியும் இந்து வேளாள மணமகனுக்கு 36 வயத்திற்குட்பட்ட குடும்பப் பெண் தேவை. முதற் கடிதத்தில் எல்லா விபரங்களும் கோரப்படுகிறது. வி இ 98 C/o உதயன், யாழ்ப்பாணம். (2146)

## சேவை

வெகு விரைவில் வரவுள்ள இலங்கையின் பிரபல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்ய விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். Business Promoters (pvt) LTD. 198 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் மணப்பெண்ணை இந்திய மணப்பெண்போல் அலங்கரிக்கவும், திருமணவைபவங்களுக்கான திருமணகேக், பிறந்தநாள்கேக், மேல்நாட்டு கீழ்நாட்டு சிற்றுண்டி வகைகளை ஓடர்செய்து பெற்றுக் கொள்ள M. ராணி, 426/1 கில்னர் லேன், யாழ்ப்பாணம். (2083)

சட்டிங், பிளவர் மேக்கிங், ஐலிங், கெயர் ஸ்டைல்மிகச்சிறந்தமுறையில கற்பிக்கப்படும். M. ராணி, 426/1. கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

### மணமக்கள்தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள் மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் இல- K. K. செல்லத்துரை கிராமக்கோட்டடி பருத்தித்துறை. (2124)

### TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

### போட்டோ ஸ்ரற்

போட்டோ ஸ்ரற், ரேனியோ, தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும். ''சுப்பனன்'' 13, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். [2167]

### மணப்பந்தல்

32 வயதுடைய யாழ் உயர் வேளாளகுல சைவ போசன பட்டதாரி ஆசிரியைக்கு அரச உயர் தொழில் புரியும் 32-40 வயதுக்குட்பட்ட சைவ போசன மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு உதயன் விளம்பர இல. 92 (1965)

## வகுப்புகள்

Spoken English ஆரம்பத்திலிருந்து சாதாரண உயர்தர ஆங்கில Literature துரித பயிற்சி: கனகசபை 646, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம். (2144)

Radio, T. V. air Conditioning, Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம் வைண்டிங் Spoken English Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (2665)

### தேவை

யாழ் நகரில் வேலை செய்யும் இருவரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது ஒரு முழு வீடு தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பரதாரர் இல. 111 உதயன் யாழ்ப்பாணம்.

### காணவில்லை

657421499 இலக்க ஜெயபுருஷினி என்பவரின் அடையாள அட்டையும் 85/A/47 பதிவிலக்கம் உடைய பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டையும் புங்குடுதீவு பகுதிக்குள் மினிவான் ஒன்றில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். 20, அம்மன் ரோட், கந்தர்மடம், ஐ. சரவணமுத்து. 3ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (2169)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 31—10—1936

உதிர்வு: 7—4—1987

அமரர்

சி. இராசரத்தினம் அவர்கள்

[இளைப்பாறிய P. W. D ஓவசியர்]

திதி: 26 - 3 - 1988

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்ப் பிரகாசித்து, எம்மை நேர்வழி நடத்திய அன்புத் தெய்வமே! காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பீர்கள் என இருந்தோம். காலன் உங்களைப் பாதி வழியில் பறித்தெடுத்தாலும் நீங்கள் விட்டுச் சென்ற பாசம் என்னும் சயிறு எங்களை விட்டு ஒரு போதும் நீங்காது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

இங்ஙனம்,
மனைவி, மாமன்,
உற்றார், உறவினர்.

''கன்னிகா பவனம்''
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

(1949)

## 19 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



சுந்தரம் சிவநேசன்

(முகாமையாளர் A. K. S.)

அன்னாரது அந்தியேட்டி கிரியை 26-3-88 காலை கீரிமலையிலும் வீட்டுக் கிரியைகள் 27-3-88 கொக்குவிலில் உள்ள இல்லத்தில் நடைபெறும் என்பதையும் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்

மாத்தளை,
கொக்குவில்.

[2672]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## Office Assistant Cum Typist

Vacancy exists for the Post of Office Assistant cum Typist, and applicants Should be Young girls Who can reasonably converse in English, with at least 2 years recent experience in English typing and be able to work unsupervised.

Good salary and Prospects for exceptional applicant.

Canvassing, either directly or indirectly, will disqualify a candidate.

To be considered for this Position, Candidates are invited to write with full Curriculum vitae to:

The Director
JAFFNA ENGLISH ACADEMY,
9, Rakka Lane, Chundikuli,
Jaffna.

## மணமகன் தேவை

U K இல் நிரந்தரமாகக் கை ஆற்றும் மருத்துவ கலாநிதிகள் இருவர் தங்களது உடன் பிறந்த 27 வயது உடைய நற்குணமுள்ள செவ்வாய்க் குற்றமற்ற (இந்து வேளாள குடும்பத்தவர்கள்) தங்களது ஒரே தங்கைக்கு தகுந்த குடும்பத்தில் இங்கு தொழில்புரிபவர்கள், அல்லது U.K இல் தகைமையுடன் தொழில் புரிபவர்கள், அல்லது அங்கு சென்று மேலும் தகைமை பெற்றுத் தொழில் புரியக்கூடிய மணமகனைத் தேடுகின்றார்கள் முழுவிபரங்களுடனும் அண்மையில் எடுக்கப்பட்ட புகைப்படத்துடனும், ஜாதகக் குறிப்புடனும் விண்ணப்பிக்கவும். புகைப்படம் திருப்பி அனுப்பப்படும்.

விளம்பர இலக்கம் - 101, C/o, உதயன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2674)

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் புதிய வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் மார்ச்மாதம் 30ஆம்திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. Technician Diploma** (N. D. T. Level) **in**

(a) Electrical Power Engineering.
(b) Mechanical Engineering.
(c) Civil Engineering and Quantity Surveying.

காலம்: 2½ ஆண்டுகள் 5 (ஸெமஸ்ரர்கள்)

கட்டணங்கள்: ஸெமஸ்ரர் I ரூபா 2000
ஸெமஸ்ரர் II-V (ஒவ்வொன்றுக்கும்) ரூபா 1200

தகைமை: ஆங்கிலத்தில் சித்தியும், கணிதம், விஞ்ஞானம் ஆகிய இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட க. பொ. த. (சாதாரண) இல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வயது/பால்: 21 வயதுக்கு உட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மொழிமூலம்: ஆங்கிலம்

**2. தொழிற் பயிற்சி நெறி**

உலோக வார்ப்பு (Foundry Practice)

1 வருடம் 2 ஸெமஸ்ரர்களில் தமிழ்மொழி மூலம் முழுநேர வகுப்புகளாக நடாத்தப்படும்.

கட்டணம்: ஸெமஸ்ரருக்கு ரூபா 600

21 வயதுக்கு உட்பட்ட ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை ரூபா 5 செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

தெரிவுகள் நேர்முகப் பரீட்சையின் பின்பு நடைபெறும்.

விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி: 30 - 03 - 1988.

பணிப்பாளர்

## பிரயாண ஒழுங்குகள்

### சவூதி அரேபியா உடனடி வேலைவாய்ப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஓட்டோ மெக்கானிக் | 700 — 800 SR |
| 2. | கனரக வாசன செலுத்துநர்கள் | 550 — 700 SR |
| 3. | லூப்பி (B) றிகேஷன் வல்லுநர் | 700 — 800 SR |
| 4. | கனரக ஈகுவிப்மன்ட் மெக்கானிக் | 700 — 800 SR |
| 5. | மோட்டார் மின்சுருள் சுற்றும் வல்லுநர் | 700 — 800 SR |
| 6. | ஓட்டோ ஏ/சி வல்லுநர் | 800 — 900 SR |
| 7. | வீல் பலன்ஸ் எலாயன் வல்லுநர் | 800 — 900 SR |
| 8. | பொடி திருத்தும் வல்லுநர் (ரிங்கர்) | 700 — 900 SR |
| 9. | பெயின்டர்ஸ் | 550 — 700 SR |
| 10. | அப்கோல்ஸ்டரி/கண்ணுடி வல்லுநர் (வாகன முகடு செய்யுநர்) | 600 — 700 SR |
| 11. | டியுன் அப் வல்லுநர் (காபுறேட்டர்) | 700 — 800 SR |
| 12. | இலிகிதர் | 500 — 700 SR |
| 13. | குழாய் பொருத்துநர் | 500 — 700 SR |
| 14. | லேத் மெஷின் டெக்னீசியன் | 600 — 700 SR |
| 15. | தச்சன் மார் | 600 — 750 SR |
| 16. | மேசன்மார் | 600 — 750 SR |
| 17. | இயந்திரவியல் என்ஜினியர் | 1800 — 2250 SR |
| 18. | மின்னியல் என்ஜினியர் | 2000 — 2500 SR |
| 19. | இலத்திரனியல் என்ஜினியர் | 2000 — 2500 SR |
| 20. | மின்பட வரைஞர் | 1000 — 1500 SR |
| 21. | A/C தொழில் நுட்பவியலாளர் | 750 — 900 SR |
| 22. | காரியதரிசி / தட்டெழுத்தாளர் | 700 — 750 SR |
| 23. | மின்னியலாளர் | 600 — 800 SR |
| 24. | டெலெக்ஸ் ஒப்றேட்டர்கள் | 650 — 800 SR |
| 25. | துப்பரவாக்கிகள் | 300 + 100 SR |
| 26. | கூலியாட்கள் | 350 + 100 SR |

தகுதியுடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்

இதற்கான நேர்முகப் பரீட்சை 4ஆம் 5ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறும்.

**A. தவச்செல்வம்**

காளுவன் சந்தி.

சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் பிரதமர்

நாட்டு நலனுக்கு மக்களோடு ஒருவராக ஒரே நாளில் 10 கி. மீ. பாத யாத்திரை மேற்கொண்டதன் மூலம் பிரதமர் ராஜீவ் உலகசாதனை படைத்து உள்ளார்.

அண்மையில் தண்டி பாதயாத்திரையை துவக்கிய பின் ராஜீவும் சோனியாவும் 3 கி. மீ. தூரம்வரை யாத்திரையில் கலந்து கொண்டனர்.

பின்னர் மகளிர் மாநாட்டில் ராஜீவ் பேசினார். பேச்சை முடித்துக் கொண்டு சுண்டோலா என்ற இடத்தில் இருந்து மீண்டும் யாத்திரையில் சேர்ந்து கொண்டு 7 கி. மீ. வரை நடந்து சென்றார்.

ஒரே நாளில் 10 கி. மீ. தூரம் நடந்து சென்ற முதல் பிரதமர் என்ற உலக சாதனையை ராஜீவ் படைத்து உள்ளார். (உ)

## குற்றாலநாதருக்கு சுக்குக்காப்பி

குற்றாலத்தில் குற்றால நாதருக்கும், அம்மனுக்கும் நாள் தோறும் சுக்குக்காப்பியை நைவேத்தியம் செய்கிறார்கள். சுக்கு, மிளகு போட்டு கஷாயம் வைத்து இருவருக்கும் படைக்கிறார்கள். கோவிலுக்குபின்னால் இரவு பகல் எந்நேரமும் குற்றாலம் அருவி கொட்டிக் கொண்டே இருக்கிறது. அது அப்பன் அம்மன் இருவர் தலையிலும் விழுவதாக ஐதீகம். இப்படி எந்நேரமும் தலையில் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருப்பதால், இருவருக்கும் சளி காய்ச்சல் என்று வந்து விடக்கூடாது அல்லவா அதற்குத்தான் சுக்குக் காப்பி. ★

## ஏழு வயதில் அறிவியல் நிபுணர்

★ சச்சின் பட்டேல் என்ற மாணவனுக்கு வயது ஏழு அமெரிக்காவில் உள்ள டேக்சாஸ் மாநிலத்தில் செயின்ட் ரோஸ் ஆப் லிமா ஸ்கூல் என்ற பள்ளியில் படிக்கும்இந்திய மாணக்கன். இந்தச்சிறுவன் சோலார் எனர்ஜி பிரய்ஸ்பேஸ்' என்று தன் கண்டுபிடிப்புக்கு பெயர் சூட்டியிருக்கிறான். இவனுடைய சண்டு பிடி' பிற்கு அமெரிக்க அறிவியல் கழகம் பரிசளித்துள்ளது.

விண்வெளிவீரர் ஒருவர், செயற்கைக்கோள் ஒன்றில் விண்ணில் ஒரு மணி நேரம் பறக்க ஆகும் செலவு எவ்வளவு தெரியுமா? 10 லட்சம் அமெரிக்க டாலர்கள்! (ஒரு அமெரிக்க டாலரின் இன்றைய மதிப்பு ரூ. 31/-

# புதிய பூமி, புதியவானம்; அமெரிக்க பாலைவனத்தில்

## தயாராகும் விந்தை

புதிய வானம், புதிய பூமி, எங்கும் பனிமழை பொழிகின்றது!

இப்படிப் பாடுவது வெறும் பாட்டல்ல. எங்கோ ஓர் இடத்தில் இது நிஜமாகிக் கொண்டிருக்கிறது.


உண்மையிலேயே அமெரிக்க விஞ்ஞானிகள் 'புதிய உலகம்' ஒன்றைப் படைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்த உலகத்திலே புதிய வானம், புதியபூமி இருக்கும். புது மழை பொழியும். பயிர் பச்சை, மிருகங்கள், ஜந்துக்கள் எல்லாம் வாழும்.

திகைக்காதீர்கள்.

அமெரிக்காவில் அரிஸோனா மாநிலத்தில் இப் 'புதிய உலகம்' சமைக்கப்படுகின்றது.

அமெரிக்கக் கோடீஸ்வரர் எட்பாஸ் நிதி உதவி அளிக்கின்றார். 3கோடி 20லட்சம் டாலர் செலவில அமுல் நடத்தப்படும் இத்திட்டத்துக்கு அரிஸோனா பல்கலைக்கழகத்தின் சூழல் பாதுகாப்பு ஆராய்ச்சிக் கூடம், நியூயார்க் ஸ்மித் சோனியன் இன்ஸ்ரிரியூட், நியூயார்க் தாவர இயல் இன்ஸ்ரிரியூட் ஆகியன பூரண ஒத்துழைப்பு அளித்து வருகின்றன.



புதிய உலகம் எப்படி இருக்கும்?

பத்தாயிரம் சதுர மீற்றர் பிரதேசத்தில் அமைக்கப்படும் புதிய உலகத்தில் விசேடமாகத் தெரிவு செய்யப்பட்ட பயிர்கள், மிருகங்கள், ஜந்துக்கள் ஆகியன வளர்க்கப்படும்.

அதுமட்டுமல்ல இந்த 'உலகத்தில்' பாலைவனம் இருக்கும். சமுத்திரமும் இருக்கும். மழையைக் கொண்டு வரும் காடுகளும் வளர்க்கப்படும்.

'புதிய உலகத்தை' மூடி கம்பியூட்டர் முறையில் கூரை அமைக்கப்பட்டிருக்கும். அதனூடாக சூரிய ஒளி உள்ளே வரும். அது கம்பியூட்டர் முறையில் ஒழுங்கு படுத்தப்படும். செயற்கை உலகத்தில் உள்ள கடலில் அலைகள் தோன்றவும் மீனினங்கள் வளரவும் அது உதவும்.

கடலில் இருந்து முகில்கள் மேலே போய் காடுகளில் மழை பொழியும். இவை எல்லாம் மூடப்பட்ட செயற்கை உலகில் இடம் பெறும் என்பது தான் விந்தை.

அடுத்த ஆண்டு 4ஆண்களும் 4 பெண்களும் இந்த 'உலகி'னுள் நுழைந்து வசிக்கத் தொடங்குவார்கள்.

அவர்கள் விவசாயம் செய்வார்கள். கால் நடை வளர்ப்பில் ஈடுபடுவர்.

ஆனால் இந்த உலகத்தில் இருந்து வெளி உலகத்துடன் அவர்களுக்கு தகவல் தொடர்பு இருக்கும். செயற்கை உலகத்தில் வாசிகசாலைகள், ஆய்வுகூடங்கள், பொழுது போக்கு வசதிகள் எல்லாம் இருக்கும்.

தாய்ப்பூமி பற்றியும் உயிரின பரிணாம வளர்ச்சி பற்றியும் அறிந்து கொள்ள இப் புதிய செயற்கை உலகம் உதவும் என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

எப்படியென்றாலும் (Biosphere II) இச் 'செயற்கை உலகம்' வெற்றிகரமாக இயங்குவது அடுத்த இரண்டு ஆண்டுகளில் தெரிய வரும்.

அப்படி வெற்றிகண்டு விட்டால் வான வெளியில் உள்ள ஏனைய கிரகங்களில் மனிதனை வாழவைக்கும் முயற்சி எளிதாகிவிடும்.

அதுமட்டுமல்ல ஒரு நாள் 'குட்டி பூமி (Earthling) ஒன்று வான வெளியில் சஞ்சரிக்க அனுப்பும் திட்டமும் சாத்தியமாகி விடும்.

புதிய வானம், புதிய பூமி - படைப்பது பாடலில் மட்டுமல்ல செயலிலும் உருப்பெற்று வருகிறதல்லவா! ★

## உலகின் பழைய ஸ்ரூடியோ

உலகின் பழைய போட்டோ ஸ்டுடியோ எங்கு தெரியுமா? இங்கிலாந்தில் சசெக்ஸ் பகுதியில் லீவ்ஸ் என்ற இடத்தில் ''ஹை ஸ்ட்ரீட்'' வீதியில் அமைந்து உள்ளது இது. எட்வர்ட் ரீவ்ஸ் என்பவர் 1858-ல் இதை நிறுவினார். அவர் பெயரிலேயே இயங்கி வருகிறது. ''போட்டோ கிராபிக் பிராசஸ்'' கலை கண்டு பிடிக்கப்பட்டு 6 ஆண்டுகள் கழித்து தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம். அதன் பிறகு 4 தலைமுறை போட்டோ கிராபர்கள் இங்கு பணி புரிந்து வந்து உள்ளனர். ஸ்டுடியோ தொடங்கிய காலத்தில் இருந்து இப்போது வரை உள்ள மொத்தம் 1 லட்சம் நெகட்டிவ்கள், பிளேட்டுகள் இந்த ஸ்டுடியோ ஸ்டோர் ரூமில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் மொத்த எடை 5 டன்.

இந்த நிறுவனத்தை இப்போது நடத்தி வருபவர் எட்வர்ட் ரீவ்சின் கொள்ளும் பேரரான டாம்ரீவ்ஸ் ஆவார். (உ)

## ஒரு தாயின் பிரச்சினை

இங்கிலாந்து நாட்டில், சூதாட்ட மிசின்கள் பெருத்து விட்டன! காசு போட்டுச் சூதாடும் மிசின்கள் இவை! 18 வயதுக்கு உட்பட்டவர்கள் சூதாடக் கூடாது என்று விதி உள்ளது! பாரி என்ற விதவைப் பெண்ணின் 15 வயது மகன், பள்ளி மாணவன். லியூக் இந்த சூதாட்டத்துக்கு அடிமையாகி விட்டான்! தினமும் 40 பவுண்டு(ஒரு பவுண்டு என்பது ரூ 48; நீங்களே கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்) சூதாடுகிறான்! இவனுக்குப் பணம் எப்படிக் கிடைக்கிறது? பல வீடுகளுக்குச் சென்று கார் துடைக்கிறான். பேப்பர் போடுகிறான். இது தவிர பள்ளியில் மதிய உணவுக்குத் தரும் சலுகை விலைக் கூப்பனை விற்று விடுகிறான்! இவனது தாய் மிகவும் கவலை அடைந்துள்ளாள்! இங்கிலாந்துப் பிரதமர் தாட்சரின் தொகுதியில் வசிக்கிறார் பாரி! எனவே, இந்த சூதாட்ட மிசின்களுக்கு ஒட்டு மொத்தமாகத் தடை விதிக்கக் கோரிக்கை விடுத்துள்ளாள். அது மட்டுமல்லாமல், தன் மகனின் படத்தை ஒரு அட்டையில் ஒட்டி, அதன் கீழ் 'இவனுக்குப் 15 வயது தான், இவனைச் சூதாட அனுமதிக்காதீர்கள்!' என்று எழுதிய அட்டைகளை, நகரில் உள்ள எல்லா சூதாட்டக் கடைகளுக்கும் விநியோகம் செய்து, அங்கு தொங்க விட வைத்துள்ளாள்! பெற்ற மனம் பித்து. பிள்ளை மனம் கல்லு! (உ)

# வேலை தேடும் இளவரசன்

ஐம்பதிலும் ஆசை வரும்!

ஆனால் அறுபதில்தான் 'ராஜா' பட்டம் வரும்.

யாருக்கு என்று எண்ணுகிறீர்களா?

இளவரசர் சார்ள்ஸுக்குத்தான்.

கேம்பிரிட்ஜ் பட்டதாரியான சார்ள்ஸ் இளவரசருக்கு இப்போது வயது 39.

மூன்று வயதாக இருக்கும் போதே இங்கிலாந்தின் 'முடி'க்கு வாரிசாகி விட்டார்.

மூன்றுவது சார்ள்ஸ்மன்னராக அரியாசனம் ஏறும் போது அவருக்கு 60 வயதாகிவிடும் என்று பக்கிங்ஹாம் அரண்மனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காரணம் இரண்டாவது எலிஸபெத் மகாராணி (இளவரசருடைய தாய்) இன்னும் திடகாத்திரமாக இருப்பதே.

எலிஸபெத் மகாராணிக்குத் தற்போது வயது 61

அவரின் தாயார் விக்ரோறியா மகாராணி இன்னும் உயிருடன் இருக்கின்றார். அவரின் வயது 87.

இரண்டாவது எலிஸபெத் மகாராணிக்கு முடியைத் துறக்கும் எண்ணம் இன்னும் வரவில்லை.

அப்படி என்றால் சார்ள்ஸ் இளவரசன் அடுத்த 20 ஆண்டுகளும் என்ன செய்யப் போகின்றார்?

வேலை தேவை:

கேம்பிரிட்ஜ் பட்டதாரி வயது 39. இன்னும் 20 ஆண்டுகளுக்கு பொது வாழ்வில் ஈடுபடக்கூடிய தான தொழிலாக இருக்க வேண்டும். குறிப்பாக நகரப்புனர்வாழ்வுப்பணி பெரிய இடத்துத் தொடர்பு உண்டு.

மேடைப்பேச்சாளர் நிதி சேகரிக்கும் ஆற்றல் படைத்தவர் தலைமைத்துவ பண்பு உண்டு. ரோயல் கடற்படையின் முன்னாள் தளபதி; விமானப்படையின் முன்னாள் சிங்கமாண்டர்.

திருமணமானவர்; இரண்டு புதல்வர்களுக்குத் தந்தை. ஹோமியோபதி வைத்தியம், தத்துவம், ஓவியம், போலோ விளையாட்டு, இசை ஆகியவற்றில் நாட்டம் உள்ளவர்.

சம்பளம் நிச்சயமாகக் கவனத்துக்கு எடுக்கப் படமாட்டாது''

இப்படி விளம்பரம் ஒன்றைக் கொடுக்க வேண்டிய நிலையில் சார்ள்ஸ் இளவரசர் இருக்கின்றார் என்று 'நியூஸ்வீக்' சஞ்சிகை கூறுகின்றது. ★

# ஸாம்பியப் பெண்களை மகிழ்விக்க அழியும் முள்ளம் பன்றி- அழுங்கு

முள்ளம் பன்றி, அழுங்கு ஆகிய இனங்கள் அழிந்து வருகின்றது.

இதற்குக் காரணம் பெண்கள் என்று குற்றஞ் சாட்டப்படுகின்றன.

இது இங்கு அல்ல ஸாம்பியா நாட்டில்.

இந்த மிருக இனங்களை காப்பாற்ற ஸாம்பியாவின் ஜனாதிபதி கென்னத் கவுண்டாவே 'போர்' தொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வேறு பெண்களை நாடும் கணவன்மாரை வசியப்படுத்தித் தங்கள் கைக்குள் வைத்துக் கொள்ளத் தேவையான வசிய மருந்துகள் அழுங்கு, முள்ளம் பன்றி ஆகியவற்றில் இருந்து தான் ஸாம்பியப் பெண்கள் தயாரிக்கின்றனர்.

பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற ஸாம்பியப் பெண்கள் கூட தங்கள் தோற்றத்தினால் மட்டும் கணவனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது முடியாத காரியம் என்கின்றனர்.

முள்ளம் பன்றியின் முள்ளுகளை எரித்து வந்த சாம்பலை உணவில் இரகசியமாகக் கலந்து




கணவனுக்குக் கொடுத்து விடுகின்றனர்.

சில பெண்கள் அம் முள்ளைத் தலையில் குத்திக் கொள்கின்றனர்.

இப்படிச் செய்வதால் கணவன் 'வழி'க்கு வந்து விடுகின்றார் என்று எண்ணுகின்றனர்.

அழுங்கின் மீதுள்ள ஓட்டையும் இது போன்றே பாவிக்கின்றனர்.

'மூவமே' என்ற பெயரில் செடி ஒன்று உண்டு. 'மூவமே' என்று ஸாம்பிய மொழியில கூறப்படுகின்றது. 'மகிழ்ச்சி' அதன் கருத்து இச்செடியின் இலையைக் காய வைத்து அரைத்து பெண்கள் தங்கள் உடலில் பூசுகின்றார்கள் அப்படிச் செய்வதன் மூலம் தங்கள் உடலை 'வைத்த கண் எடுக்காமல்' கணவன் பார்க்க உதவுகிறதாம்.

இப்படிச் செய்வதன் மூலம் இல்வாழ்க்கை சிறப்பாக அமைவதாக ஸாம்பியப் பெண்கள் கூறுகின்றார்கள்.

ஆதாரம்: பனேஸ்

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

மூன்று ஆண்டுகளுக்கான (1987, 1988, 1989) ஒரு தாள் கலண்டர் இங்கு பிரசுரமாகின்றது. இதை 'முக்காலக்' கலண்டர் என்று கூறலாம். தயாரித்தவர் எங்களூரைச் சேர்ந்தவர். அவர் பெயர் திரு எஸ். ஆர். பேரின்பநாயகம். வயாவிளான்வாசி அவர். பெங்களூரைச் சேர்ந்தவர் தயாரித்த 1988க்கான ஒரு தாள் கலண்டர் ஏற்கனவே சஞ்சீவியில் பிரசுரமானது தெரிந்ததே.

# ஒரே பார்வையில் முக்காலக் கலண்டர்

| ஆண்டு | மாதம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1987 | பெப்ரவரி மார்ச் நவம்பர் | யூன் | செப்டம்பர் டிசம்பர் | ஏப்ரல் யூலை | ஜனவரி அக்டோபர் | மே | ஆகஸ்ட் |
| 1988 | மே | பெப்ரவரி ஆகஸ்ட் | மார்ச் நவம்பர் | யூன் | செப்டம்பர் டிசம்பர் | ஜனவரி ஏப்ரல் யூலை | அக்டோபர் |
| 1989 | ஜனவரி அக்டோபர் | மே | ஆகஸ்ட் | பெப்ரவரி மார்ச் நவம்பர் | யூன் | செப்டம்பர் டிசம்பர் | ஏப்ரல் யூலை |
| திகதி | கிழமை | | | | | | |
| 1 \| 8 \| 15 \| 22 \| 29 | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
| 2 \| 9 \| 16 \| 23 \| 30 | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| 3 \| 10 \| 17 \| 24 \| 31 | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் |
| 4 \| 11 \| 18 \| 25 \| ★ | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் |
| 5 \| 12 \| 19 \| 26 \| ★ | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
| 6 \| 13 \| 20 \| 27 \| ★ | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | [illegible] | வியாழன் |
| 7 \| 14 \| 21 \| 28 \| ★ | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |

## மழையைக் கட்டுப்படுத்திய விஞ்ஞானி மாயமாய் மறைந்தார்

1930 - ஆம் ஆண்டு டாக்டர் ஜார்ஜ் ஏ. ஐ. எம். ஸைக்ஸ், தம்மை ஒரு பெரிய விஞ்ஞானி என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். அன்டெனா, சக்தி வாய்ந்த ரேடியோ, மின்னல் தடுப்புக் கருவிகள் மேகங்களைக் கட்டுப்படுத்தும் - கலைக்கும் கருவிகள், இப்படிப் பலப்பல நவீனக் கருவிகள் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றினால் வானிலையைத் தமது இஷ்டப்படி எளிதாக மாற்றியமைக்க முடியும் என்றும் அறிவித்தார். இதை நம்பிய நியூயார்க்-மெல்மாண்ட் ரேஸ் கிளப் இவரை அணுகி, அங்கு ரேஸ் நடைபெறவிருந்த பதினைந்து நாட்களும் மழை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜார்ஜிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி மழை வராமல் இருக்கும் ஒவ்வொரு நாளும் ரேஸ் கிளப் ஜார்ஜுக்கு 1000 டாலர்கள் சம்பளமாக வழங்கும். ஆனால் மழை வந்து விட்டால் ஜார்ஜ் ரேஸ் கிளப்புக்கு 2000 டாலர்கள் அபராதமாகக் கட்ட வேண்டும்! இந்த ஒப்பந்தத்தை அந்நாளைய பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்தன! கிண்டல் செய்தன! இரண்டு நாட்கள் அடைமழைக்குப்பின் நல்ல வானிலை நீடித்தது! ரேஸும் தடங்கலில்லாமல் தொடர்ந்து நடைபெற்றது. டாக்டர் ஜார்ஜ் 7000 டாலர்கள் பெற்றார் இந்த நிழ்ச்சிக்குப் பின் மழையைக் கட்டுப்படுத்திய விஞ்ஞானி ஜார்ஜ் காணாமலேயே போய் விட்டாராம். (உ)

## போலி டாக்டர் பட்டம்

தமிழ்நாடு உட்பட பலமாநிலங்களில் உள்ள 23 கல்லூரிகள் போலி டாக்டர் பட்டங்களை வழங்குவதாக மத்திய சுகாதார இணை அமைச்சர் சரோஜ் கபார்டே ராஜ்யசபாவில் தெரிவித்தார்.

அந்தக் கல்லூரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தர விட்டுள்ளது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்ளுங்கள்
1. திமிங்கிலம் 2. தேனீக்கள்

திமிங்கிலம் கடலில் வாழும் விலங்கினம். இந்த இனம் அழிந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது இதற்கு முதற்காரணம் மனிதன் நடத்தும் திமிங்கில வேட்டைதான். இரண்டாவது காரணம் கப்பல், நீர்மூழ்கிக் கப்பல் ஆகியவைகளின் நடமாட்டம் அதிகமாகி கடல் நீர் கெட்டுப்போய் விட்டதும்தான். இப்படிக் கடல்நீர் கெட்டுப் போய்விட்டதால் திமிங்கிலத்திற்குத் தேவைப்படும், 'பிளாங்டான்' என்ற ஒரு சிறியவகை மீன் இனம் வாழமுடியாமல் செத்துவிடுகிறது. போதிய உணவு இன்றி திமிங்கிலங்கள் பட்டினியால் வாடியும் அழிந்து போகின்றன இந்த இனம் விருத்தியாவதில் வேகம் காட்ட முடியவில்லை ஆனால் அதே நேரத்தில் இதைப்பிடிக்க மனிதன் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் வேகம் மிக அதிகமாகி விட்டது. மனிதன் ஹெலிக்காப்டரில் போய் கூட திமிங்கிலத்தை வேட்டையாடுகிறான். திமிங்கிலத்தின் முக்கிய தீனியான நண்டு, இறால் ஆகிய மீன்களை மனிதனே வேட்டையாடி விட்டால், பாவம், திமிங்கிலம் என்ன செய்யும்? திமிங்கிலம் பெரிய ஜீவன் நிறைய தீனி தேவை மனிதனின் மனம் மாறினால்தான், திமிங்கிலம் உயிர்வாழும் ★

தேன்கூடொன்றில் சுமார் 10 000 தேனீக்கள் இருக்கும் குளிர்காலத்தில் தேனீக்கள் தேனையே உணவாக உட்கொள்ளுகிறது. கோடைகாலங்களில் தேனீக்கள் பூக்களுக்கு பறந்து சென்று மகரந்தங்களைச் சேமிக்கும். ஒரு செடியிலிருந்து அடுத்த செடிக்குப் பறந்துசென்று தேனீக்கள் கால்களைப்பதிக்கும். அதன் பாதங்களில் ஒட்டிக்கொண்ட மகரந்தப் பொடிகளை அடுத்த மரத்துப் பூக்களில் வைக்கும். இந்த மகரந்தச் சேர்க்கை வேலையைத் தேனீக்கள் செய்கின்றன. இந்த மகரந்தப் பொடிகளை ஆறுபக்கங்களைக்கொண்ட தேன் கூட்டில்கொண்டுபோய்ச் சேர்க்கும். இந்தக்கூடுகளில் நூற்றுக்கணக்கான அறைகள் இருக்கும். குளிர்காலத்தில் இந்த அறையின் கதவுகள் மூடிக்கொள்ளும் உள்ளே தேனீக்கள் தேனை உணவாகக் கொள்ளும். தேன் மிகவும் சத்துள்ள உணவு தேனீ கூட்டின் சூட்டுத் தன்மை ஒரே மட்டத்தில் இருந்தால்தான். தேன் தரமாக இருக்கும். தேனீக்கள் தங்கள் சிறகுகளால் விசிறி. தேன் கூட்டின் அதிக பட்ச உஷ்ணத்தைக் குறைக்கும். அதாவது தேனீக்கள் தங்கள் இறகுகளை விசிறியாகப் பயன்படுத்தும். இதே முறையைக் கையாண்டு, தேனீ தன் முட்டைகளையும் தேவைப்படும் வெப்பதட்ப நிலையில் வைத்திருக்கும். தேன் சேகரிப்பவர்கள் கோடைகாலத்தில், சர்க்கரைத் தண்ணீரைத் தேனீக்களுக்குகொடுத்து விட்டு தேன் சொட்டுக்களைச் சேகரிப்பார்கள் ★


## தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு

"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு" எனத்தலைப்பிட்டபாடல் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் அற்புதமான குழந்தைப்பாடல் ஆகும். பசுவைச் செல்வமாகக் கருதுவது நம் மரபு. பசுக்களை அருளாளர்களாகப் பழங்கால ருஷியர்களும் கருதினர். மன்னனுக்கு அடுத்தபடியாகப் பசுக்களைப் போற்றி மகிழ்ந்தனர். கிழக்காபிரிக்க மக்கள் நம் வீட்டில் உள்ள பசுக்களைப் பற்றி நமக்குத் தெரியாத செய்திகள் பல உள்ளன "யூனி நாத்துராலிஸ்த்" இதழ் பசுக்களைப் பற்றிய பல செய்திகளைத் தெரிவிக்கிறது.

காட்டு எருது, பசு முதலிய கால்நடைகளை வீட்டு விலங்குகளாக முதன் முதலில் பயிற்று 500 - 600 கி. கிராம் எடையிருக்கும், சாதாரணமாகப் பசுக்கள் 20 ஆண்டுகள் வாழும். இதில் 12/13 ஆண்டுகளுக்குப் "பால் ஆவே" யாகப் பயன் தருகிறது. பெரும்பாலும் ஓர் ஆண்டுக்குப் ஒரு கன்றுதான் ஈனும். மிக அரிதாக மூன்று முதல் ஏழு கன்றுகள் வரை ஈனும்.

சிவப்பு, நிறம் பசுவை மிரட்டும் என்பர். இது உண்மையன்று. வெள்ளை நிறத்தைத் தவிர எந்த நிறத்தையும் பிரித்தறியும் திறமை பசுவுக்கு இல்லை. பசுவின் மோப்ப சக்தியும் அவ்வளவு வளர்ச்சியடைந்ததாகச் சொல்ல முடியாது புல்லைத் தின்னும் முன் நிலத்தை மிகக் கவனமாக மோந்து பார்க்கும். மண்ணில் தாது உரம் இருப்பின், அங்குள்ள ஸில் பசுக்கள் செய்கின்றன அங்கு அவை பந்தாடுகின்றன. ஸ்கூட்டர் ஓடுகின்றன. 'பாலே' நடனமாடுகின்றன.

பசு ஏற்ற இறக்கமில்லாத குரலில் ஒரே மாதிரியாகக் கத்துவது போலத் தோன்றுகிறதல்லவா? அது உண்மையன்று. பசு 11 வகைப் பொருளுடைய குரலில் கத்துகிறது; தனது கன்றுக்குட்டியோடு 'தொடர்பு' கொள்ள விரும்பும்போது, அது வெவ்வேறு "குரல்" களைப் பயன்படுத்துகின்றது. இசையின் ஒலி நயத்திற்கு ஏற்ப அதைப் பிரித்தறியும் இயல்பும் பசுவுக்கு உண்டு. மெல்லிய இசை ஒலிக்கும் போது, அருகில் நின்று கேட்கும் கண்ணனின் குழலோசைக்குப் பசுக்கள் மயங்கியது உண்மை



வித்த பெருமை 8000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்தியர்களுக்குரியது.

2000 ஆண்டுகளுக்கு முன்பு பசுக்கள் மிகவும் உயரமாக இருந்தன. மனிதர்கள் நின்றுகொண்டுதான் பால் கறந்தனர்.

பசுக்களில் கலப்பின முறை 18ஆம் நூற்றாண்டில் தான் தொடங்கியது. இந்த முறையைக் கண்டுபிடித்தவர் ராபர் பாக்வெல் என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி ஆவார். தற்போது 960 வகை கால்நடைப் பெருக்கு முறைகள் உள்ளன.

சாதாரணமாக ஒரு நல்ல பசு ஒரு நாளைக்கு 15 — 20 லீற்றர் பாலை உற்பத்தி செய்கிறது இது ஓராண்டில் 280 — 320 நாட்களுக்குப் பால் தருகிறது.

நல்ல ஊட்டமுள்ள பசுக்கள் தமது மூன்று வது நான்காவது வயதில் புல்லைத் தின்னும். பசுவுக்கு உப்பு மிகவும் பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது. தன் உடம்பிலுள்ள உப்புச் சத்து குறையும் போது தான் அது அதிக அளவில் உப்பை விரும்புகிறது. மற்றப்படி, அதற்கு விருப்பமானது இனிப்புத்தான்.

பசு 1. 5 மீட்டர் உயரமுள்ள வேலியைத்தாண்டும் ஆபத்து நெருங்கும் போது மணிக்கு 40 கி. மீ. வேகத்தில் கொம்பு தெறிக்க ஓடும்.

நமது சர்க்கஸ்ஸில் நாய் செய்யும் சில வேலைகளைச் சோவியத் சர்க்கஸில் ... தான் போலும்.

பசுவுக்கு நல்ல தீவனம் வேண்டும் அது ஒரு நாளைக்கு 100 - 130 லிட்டர் தண்ணீர் குடிக்கும். இதில் 80 - 100 லிட்டர் தண்ணீர் தீவனத்தை அசைபோடும் போது ஊறும் எச்சிலுக்குத் தேவைப்படுகிறது

உலகில் தற்போது 20 கோடி பசுக்கள் (23 பேருக்கு ஒரு பசு வீதம்) இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

ஆதாரம்- அறிவியல் பண்ணை

தொகுப்பு - க. கனகராசா

### சிறுவர் சுடர்


## தண்டின் வகைகள் கண்டு கொள்வோம்

(C) தண்டின் வகைகள் அல்லது தோற்றம்:

(i) நிமிர்ந்த தண்டு - தண்டு நிலக்குத்தாக நேராக நிற்பதால் தாவரம் நிமிர்ந்துநிற்கும். உ+ம்: குப்பைமேனி, கமுகு, வாழை, மூங்கில், வேம்பு, மா போன்றவை.

(ii) நலிந்த தண்டுள்ளவை - நிமிர்ந்துநிற்க முடியாத தண்டுகளை உடைய தாவரங்கள், இவை மேலும் பின்வரும் முறையில் வகைப்படுத்தப்படும்,

(a) படர்கொடிகள் நிலத்தில் படரும் தாவரங்கள் இலைதண்டு எல்லாம் நிலத்தில் படிந்திருந்தால் இத்தகைய கொடிகள் படர்ந்துகிடக்கின்ற கொடிகள் எனப்படும். உ+ம்: விஷ்ணுகிரந்தி, புளிக்கீரை போன்றவை. படர்கொடிகளில் நுனிநிமிராமல் இருந்தால் படுக்கின்ற படர்கொடிகள் எனவும் (உ+ம்; வல்லாரை - புளிக்கீரை; மிதிபாவை- கொடியான் கூந்தல் முதலியன), நுனி நிமிர்ந்திருந்தால் நுனி நிமிரப்படுகின்ற கொடி எனவும் அழைக்கப்படும் (உ+ம்: மூக்குத்திப் பூண்டு - பூசினி- பொடுதலை முதலியன) கொடி மிகையாகக் கிளைத்து பரவலாக இருந்தால் பரவலாக்கப்படுகின்ற கொடி எனப்படும். (உ+ம்: மூக்கறைச்சி; எழுத்தாணிப் பூண்டு பொடுதலை, மிதிபாவை முதலியன.) படர்கொடிகள் கணுக்களில் வேர்கொண்டிருந்தால் நகருகின்ற படர் கொடிகள் எனப்படும். உதாரணம்: மூக்குத்திப் பூண்டு, பொடுதலை, பூசினி, எழுத்தாணிப் பூண்டு முதலியன.



(b) ஏறும் தாவரங்கள்:- நலிந்த தண்டுகளை உடைய தாவரங்கள் ஒளியைப் பெறுவதற்காக கொழுகொம்புகளைப் பற்றி ஏறலாம். இவை ஏறும் தாவரங்கள் அல்லது ஏறிகள் எனப்படும் ஆதாரத்திலேறுவதற்கு தாவரங்கள் பல வழிகளைக் கையாளும். சில தாவரங்களின் தண்டுகள் ஆதாரத்தில் சுற்றி ஏற உதவும். இவை சுற்றிகள் அல்லது சுற்றுச்செடிகள் அல்லது தண்டேறிகள் எனப்படும். (உ+ம்: பயற்றங்கொடி, மயிர்மாணிக்கம், குண்டுமணி, சுரைத் தப்பூக்கொடி, வள்ளிக் கொடி முதலியன.)

தண்டேறிகள் மிகப் பெரியதாக மரம் போலிருந்தால் அவை மரமயவேறிகள் எனப்படும். மரமயவேறிகள் பொதுவாகக் காடுகளில், சிறப்பாக அயன மண்டல மழைக் காடுகளில் காணப்படும். உதாரணமாக கடற்சில்லு மாதவிக்கொடி அல்லது குருக்கத்தி, கொம்பிறுற்றம், இரங்கூன் மல்லிகை அல்லது பிச்சி, குறிஞ்சா, சிந்தில் கொடி முதலியன.

சில ஏறிகள் வேரின் உதவியினாலும், சில கொழுக்கிகளின் உதவியினாலும், சில தந்துகளின் உதவியினாலும் ஆதாரங்களில் ஏறும். (இவை பற்றிய விவரணம் தண்டு, இலை, இலையடிச் செதில்கள், வேர் ஆகியவற்றின் திரிபுகள் பற்றி ஆராயும் பொழுது விரிவாகத் தரப்படும்.) ★

- கே எஸ். குகதாசன் -
(அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

## டாக்டர் இல்லாத நிலையில் குழந்தைகளுக்கு காயம் ஏற்பட்டால்...

தான் வருங்காலத்தில் நம்பிக்கையும், ஒழுக்கமுள்ள, நோயற்ற திடகாத்திரமான ஒரு குழந்தையால் தான் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை.

இதை மனதில் கொண்டு பெற்றோர் தம் பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாகவும் நோயுற்ற காலங்களில் நன்கு பராமரித்தலும் மிக அவசியமாகும்,

குழந்தைகள் என்றால் அடிக்கடி ஏதாவது காயங்களுடன் நம்முன் வந்து நின்று அழுவார்கள்.

இவற்றை நாம் கவனயீனமாகவிட்டால் அதுவே குழந்தையின் வருங்காலத்தை மிகவும் பாரதூரமாகப் பாதித்து விடும்.

இன்று நாம் இருக்கும் சூழ்நிலையில் நாம் நினைத்த நேரமெல்லாம் டாக்டரைத் தேடியோ, ஆஸ்பத்திரிக்கோ போக முடியாத நிலை ஏற்படலாம்.

அப்படியான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நமக்கு உறுதுணையாக இருப்பது நமக்கு நாமே செய்து கொள்ளும் முதல் உதவி.

இங்கு அண்மையில் நடந்த ஒரு சம்பவம் எனக்கு நினைவுக்கு வருகிறது.

அன்று விடியற் காலை நான்கு மணி இருக்கும். ஊரடங்குச் சட்டமும் அமுலில் இருக்கும் நேரம் ... வெளிச்சத்தைக் ... கும் கூட.

### நங்கை

பேரிரைச்சலுடன் வந்த காற்றினாலும் மழையினாலும் தாக்குப் பிடிக்க முடியாது சாய்ந்தது ஒரு தென்னை மரம்.

அது அடுத்த வீட்டுப் படுக்கை அறையில் விழுந்ததினால் படுத்திருந்த குழந்தைகளின் தலையிலும், காலிலும் காயங்களை ஏற்படுத்தியது. ஓடு உடைந்து குழந்தைகளின் மேல் விழுந்ததினால் காயங்கள் ஏற்பட்டன.

வீல்... என்ற குழந்தைகளின் பெருங் கூச்சல் கேட்டு படுக்கையை விட்டு எழுந்த நான் எங்கள் வீட்டின் பின் புற வேலியைப் போடுகிறேன். ... கண்டதும் தங்கள் இரு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு ஓடி வந்தார்கள் அடுத்த வீட்டுத் தாயும் தந்தையும்.

ஒன்றரை வயதுக் குழந்தையின் தலையில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டு இருந்தது. தாய் கையில் கிடைத்த ஒரு துணியை எடுத்து காயத்தின் மேல் அழுத்திப் பிடித்துக் கொண்டு இருந்தவள் அது ஈரமானதும் அதை எடுத்து விட்டு வேறு துணியை காயத்தின் மேல் வைப்பதைப் பார்த்து எனக்கு ஒரே பதை பதைப்பாக இருந்தது.

காரணம் அது தவறான முறையாகும், அதை அந்தத் தாய்க்குச் சுட்டிக் காட்டினேன்.

"என்னதான் நான் செய்கிறது..."? ஊரடங்கு நேரம் டாக்டரிடமும் போக முடியாமல் இருக்கிறதே ....! என ஓவெனக் கதறி அழுதாள் தாய் அவளைச் சமாதானப் படுத்தி-

"ஒரு முறை காயத்தின் மேல் துணியை வைத்து அழுத்தினால் அது ஈரமாகி விட்டால் அதைத் திரும்ப எடுத்து விட்டு வேறு துணி வைப்பது பிழை இது மேலும் இரத்தப் பெருக்கை ஏற்படுத்தும்.

ஈரமான துணிக்கு மேலேயே அடுத்து அடுத்த துணிகளையும் வைத்து அழுத்திப் பிடிக்கவேண்டும் அல்லது சுட்டவேண்டும்"-

இது போல காயங்கள் கையிலோ காலிலோ ஏற்பட்டால் காயப்பட்ட கையையோ காலையோ சற்று உயரமாகத் தூக்கி வைத்தல் வேண்டும்.

பின் ஒரு துணியால் அழுத்திக் கட்ட வேண்டும் இதற்கும் இரத்தப் பெருக்கு நிற்காவிட்டால் காயத்துக்கு சற்று மேலே ஒரு ரப்பர் துண்டை எடுத்து இறுக்கமாகக் கட்டவேண்டும். இப்படி அத் தாய்க்குக் கூறிச் செய்து காட்டினேன்

பின்னர் டாக்டரிடம் கொண்டு சென்று காட்ட வேண்டும் என்றும் அத் தாய்க்குத் தெரிவித்தேன்.

- அல்லி -

## திருமணம் பற்றிய அமெரிக்க ஆய்வு!

திருமணம், குடும்ப வாழ்க்கை இவற்றின் தொடர்பாக, அமெரிக்காவின், 'தேசிய மனநிலைக் கழகம்' த்தின். 'குடும்பநல அபிவிருத்தி' பிரிவைச் சேர்ந்த டாக்டர் ராபர்ட் ரைடர், பல ஆராய்ச்சிகள் செய்து, பல முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

அவரது சில முடிவுகள் அதிர்ச்சியைத் தருவதாக இருந்தாலும், ஆராய்ச்சியின் விளைவில் கண்டவை என்ற அடிப்படையில், அவற்றை இங்கு வெளியிட்டுள்ளோம்.

★ ஒரே விதமான பின்னணியைக் கொண்டவர்கள் திருமணம் செய்து கொள்ளும் போது, அவர்களது, திருமணம் மகிழ்ச்சிகரமாகவும், வாழ்க்கை முழுமையாகவும் அமைகிறது.

★ உடலுறவில் ஏற் ... மகிழ்ச்சிகரமாக இருக ... களைச், சிதைத்து விடுகிறது.

★ பலர் நினைப்பது போல, நாத்திமார்கள் குறுக்கீடுகளினால் குடும்பத்தில் உண்டாகும் பிரச்சினைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு.

★ தம்பதிகளிடையே விரிசல் ஏற்படும்போது, குழந்தை பிறந்தால் சரியாகி விடும் என்ற கணிப்பு அவ்வளவு சரியானதல்ல.

★ கணவன் - மனைவி பிரிந்து இருப்பதால் பாசம் வளரும் என்பதும் வெறும் மாயையே!

★ உண்மையான காதல், திருமணத்திற்குப் பின்னரே ஏற்படுகிறது. அப்போது தோன்றும் நேசமும், பாசப் பிணைப்பும் தான் உறுதியானது.

★ திருமணத்திற்கு முன்பு ஏற்படும் காதல் அவ்வளவு ... மானது என்று ... முடி ... ★

## பொது அறிவுப்போட்டி இல. 1

| | |
|---|---|
| 1. விளக்கு எரிய எது வேண்டும்? | திரி / எண்ணெய் |
| 2. அடுப்பில் மிஞ்சுவது எது? | கரி / சாம்பர் |
| 3. எதற்குப் பக்கவாத்தியம் வேண்டும்? | ஆடல் / பாடல் |
| 4. எங்கே அதிக கூட்டம் சேரும்? | திருவிழா / சந்தை |
| 5. நேரம் பார்க்க உதவுவது எது? | சூரியன் / கடிகாரம் |
| 6. கடலில் விளைவது எது? | உப்பு / முத்து |
| 7. தாகம் தீர்ப்பது எது? | தண்ணீர் / மோர் |
| 8. படகு ஓட்ட எது வேண்டும்? | துடுப்பு / டீசல் |
| 9. யார் பெயருடன் காந்தி உண்டு? | மகாத்மா / இந்திரா |
| 0 உயரமாக வளர்வது எது? | பனை / தென்னை |
| 11. சாப்பாட்டு இலையாகவும் பயன்படுவது எது? | வாழைஇலை / தாமரைஇலை |
| 12. கன்று ஈனுவது எது? | பசு / வாழை. |

நிபந்தனைகள்:

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து 6 04 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக்கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்புங்கள்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். பரிசுக்கான காசோலைகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்; நேரில் வர வேண்டியதில்லை.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

பொது அறிவுப்போட்டி இல:1
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புரட்சிச் செல்வி பற்றி பேராசிரியர்

புரட்சிச்செல்வி என்று சொல்கிறார்கள்.

எம். ஜி ஆரிடம் இருந்தார் என்பதைத் தவிர புரட்சித் தலைவி வேறு என்ன புரட்சியைச் செய்தார்?

எனக்கென்று குடும்பம் இடையாது என்கிறார். இதை வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளலாம்.

குழந்தை குட்டி இல்லை என்கிறார். சில நாட்கள் சென்றால் தான் இதை ஒத்துக் கொள்ள முடியும்.

- குடியாத்தம் கூட்டத்தில் பேராசிரியர் அன்பழகன் (தி. மு. க.) ஆற்றிய உரையில் இருந்து. ★

## சின்ன 'கருணாநிதி' பற்றி 'பண்ருட்டி'

வீரப்பன் கருணாநிதியுடன் 1984 ஆம் ஆண்டே கைகோர்க்க ஆரம்பித்தார்.

புரட்சித் தலைவருக்கு இது தெரியும். அதனால் தான் நான் சொன்னேன், வீரப்பன் சின்னக் கருணாநிதி என்று.

கோதுமை வழக்கு, பூச்சிகொல்லி மருந்து வழக்குகளை இந்திரா காந்தி வாபஸ் வாங்கவில்லையானால் இன்று கருணாநிதி ஜெயிலில் கம்பி எண்ணிக்கொண்டு இருப்பார்.

ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் இருக்க வேண்டியவர் இன்று ஊர் சுற்றி வருகிறார்.

- விருதுநகர் கூட்டத்தில் பண்ருட்டி இராமச்சந்திரன். ★

# மோதுபவர்களைக் கலைஞர் எளிதில் விடமாட்டார்

**சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந. வித்தியாதரன்**

"ஜானகியிடம் இருக்கும் பணத்தை அபகரிக்க சுற்றுகிற காக்காக் கூட்டம்" என்று வீரப்பன் கோஷ்டியைத் தாக்கி பண்ருட்டி ராமச்சந்திரன் பேசினார்.

### பண்ருட்டி ராமச்சந்திரன்

சென்னை வடபழனியில் அ. தி. மு. க. (ஜெ) பொதுக்கூட்டம் நடந்தது.

இதில் கலந்துகொண்டு முன்னாள் மந்திரி பண்ருட்டி ராமச்சந்திரன் பேசியதாவது:-

### அரசியலைவிட்டு ஒதுங்குங்கள்

எம் ஜி. ஆருடைய விருப்பத்துக்கு மாறாக ஜானகி அம்மையார் அரசியலுக்கு வந்துஇருக்கிறார். அவரை நான் கேட்டுக்கொள்கின்றேன். இன்னும் மோசம் போகவில்லை அரசியலை விட்டு ஒதுங்குங்கள். அதுதான் எம். ஜி. ஆருக்கு நீங்கள் செய்யும் நன்றிக்கடன்.

### காக்கா கூட்டம்

ஜானகியைச் சுற்றி இருக்கிற கூட்டம் (வீரப்பன் கோஷ்டி) காக்காக் கூட்டம் அவருடைய பணத்தை ஏமாற்றி அபகரிக்க காத்திருக்கும் எத்தர்கள். இவர் சற்று மயங்கிச் சாய்ந்தாலோ அல்லது தூக்கம் வருகிறது என்று கண்ணை மூடினாலோ பணத்தையெல்லாம் கவர்ந்து செல்லக் காத்திருக்கும் கயமைக் கூட்டம் அது.

### மக்கள் துவைத்தனர்

அ. தி. மு க. பிளவு காரணமாக வேஷ்டியில் இருந்து அழுக்கு நீங்குவதுபோல எம் ஜி ஆருடைய பெயரைக் கெடுத்தவர்கள் போய்விட்டார்கள். அழுக்கு அங்கே இருக்கிறது. சுத்தமான வேஷ்டி இங்கே இருக்கிறது. 23 நாளில் மக்கள் அடித்து துவைத்து அழுக்கைப் பிரித்துவிட்டார்கள்.

## அந்த அனுபவம் எனக்கு உண்டு என்கிறார் நாஞ்சிலார்

எம். ஜி ஆருக்கு உழைப்பின்மீது மரியாதை உண்டு. யாருக்கும் ஆட்டோகிராபில் "உழைப்போரே உயர்ந்தவர்" என்றுதான் எழுதுவார். அதை எழுதிக் கையெழுத்துப் போட அரைமணி நேரம் ஆனாலும்கூட அதைத் தான் எழுதுவார்.

ஒருமுறை ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனை சந்திக்கப்போயிருந்தோம், எம் ஜி ஆர். பேசியது ஆர். வி.க்கு புரியவில்லை எனக்கு அதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் அல்லது எம். ஜி. ஆர் என்ன சொல்லவிரும்புகிறார் என்பதை தெரிந்து கொள்ளும் திறன் இருந்தது. அவர் சொல்ல நினைப்பதை நான் "இதைத்தானே சொல்ல விரும்புகிறீர்கள்" என்பேன், அவர் தலையை ஆட்டுவார். அதை நான் மற்றவர்களுக்குச் சொல்வேன்.

இவ்வாறு பண்ருட்டி ராமச்சந்திரன் பேசினார். ★

# வீரப்பன், கருணாநிதிக்கு மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்

"எனக்குக் கூட்டம் கூடுவதைப் பார்த்து தங்களுக்கும் கூட்டம் கூடும் என நினைத்து கருணாநிதியும், வீரப்பனும் ஏதேதோ செய்கிறார்கள். அவர்களுக்கு தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்ட வேண்டும்" என ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்.

திருமண நிகழ்ச்சி ஒன்றுக்குத் தலைமை வகித்து ஜெயலலிதா பேசியதாவது:-

மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். அவர்கள் எல்லா செல்வங்களையும், எல்லா நலன்களையும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

### கதை கேளுங்கள்

இந்த நேரத்தில் உங்களுக்கு ஒருகதை சொல்ல விரும்புகின்றேன். ஒரு ஊரில் புதியதாக திருமணம் ஆன ஒரு பெண், கணவன் வீடு செல்லும் போது, தான் சிறுவயது முதலே பூஜை செய்து வந்த ஒரு மர பொம்மையையும் எடுத்துச் செல்கிறாள்.

இது, அந்தப் பெண்ணின் மாமியாருக்குப் பிடிக்கவில்லை. தன் மகனைக் கூப்பிட்டு மருமகளைக் கண்டிக்கச் சொல்கிறாள். பனைவியைக் கணவன் கண்டிக்கிறான். ஆனால், மனைவியோ, பூஜை செய்வதைநிறுத்தவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த கணவன் அந்த மரப்பொம்மையை தூக்கித் தெருவில் வீசி விடுகிறான். மனைவியையும் அடிக்கிறான்.

இதனால், அந்தப்பெண் வீட்டை விட்டு வெளியேறி மரப் பொம்மையுடன் அழுதுகொண்டே செல்கிறாள். இரவு நேரம் ஆகி விட்டது. அப்போது அவள் ஒரு காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தாள். இரவு நேரமானதால், ஒரு மரத்தின் மீது ஏறி, மரப் பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டு

## திருமணவிழாவில் ஜெயலலிதா கதை

தூங்கி விடுகிறாள்.

சிறிது நேரத்தில் அங்கு ஒரு திருடர் கும்பல் வருகிறது. அவர்கள் கொள்ளையடித்த பொன்னையும் பொருளையும் அந்த மரத்தின் கீழ் வைத்து பங்கு போடுகின்றனர். அப்போது அந்தப் பெண்ணின் கையில் இருந்த பொம்மை தவறிக் கீழே விழுகிறது. அதை ஏதோ பேய் என்று நினைத்துத் திருடர் கூட்டம் பொன்னையும், பொருளையும் அப்படியே விட்டு விட்டு ஓடி விடுகிறது.

காலையில் கண் விழித்த அந்தப் பெண் மரத்தை விட்டுக் கீழே இறங்கி மரப் பொம்மையைத் தேடும் போது பொன்னும், பொருளும் அவளுக்குக் கிடைக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வீடு திரும்பும் பெண்ணை கணவனும் மாமியாரும் வரவேற்கின்றனர்.

இதை அறிந்த பக்கத்து வீட்டுப்பெண்ணும், தன் கணவனை அடிக்கச் சொல்லி மரப் பொம்மை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு காட்டுக்கு செல்கிறாள் அந்த குறிப்பிட்ட மரத்தின் மீது ஏறிக் காத்துக் கொண்டிருந்தாள்.

இந்த முறையும் திருடர் கும்பல் அங்கு வந்தது. அவர்கள் கொள்ளையடித்த பொருள்களை அந்த மரத்தின் கீழ் வைத்துப் பங்கு போட ஆரம்பித்தனர். அப்போது அந்தப் பொம்மையைத் திருடர்கள் மீது வீசினாள்.

ஆனால் இந்த முறை திருடர்கள் பயப்படவில்லை. மரத்தின் மீது உட்கார்ந்திருந்த பெண்ணைப் பார்த்து விட்டனர். அவளைக் கீழே இறங்கச் செய்து நன்றாக அடித்து உதைத்தனர்.

இதைப்போல, நான் போகும் இடங்களில் எல்லாம் கூட்டம் கூடுவதைப் பார்த்து, தங்களுக்கும் கூட்டம் கூடும் என நினைத்துக் கருணாநிதியும், வீரப்பனும், பக்கத்துவீட்டுப் பெண்ணைப்போல ஏதோ செய்கிறார்கள். தேர்தலில் அவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும்.

கருணாநிதி முதல்வராக இருந்தபோது, ஏழை எளிய மக்களுக்கு ஏதாவது நன்மை செய்தாரா? ஏழரை ஆண்டுகால ஆட்சியில் தனது குடும்பத்துக்கு தான் கோடிக்கணக்கான ரூபாய் சொத்துச் சேர்த்தார் கருணாநிதி மீண்டும் சொத்து சேர்க்க துடிக்கிறார். தான் முதல்வர் ஆக வேண்டும் என்பதில் அக்கறையுடன் உள்ளார்

தனது மறைவுக்குப் பிறகு அ. தி மு க. தொண்டர்களுக்கு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று எம் ஜி ஆர் எனக்கு உத்தரவிட்டார். அதை ஏற்று அவருக்கு நான் சத்தியம் செய்து கொடுத்தேன். அதன்படி இன்று அரசியலில் ஈடுபட்டு வருகிறேன்.

எனக்கு என்று யாரும் இல்லை. எனக்கு நீங்களும், உங்களுக்கு நானும் தான். கொள்ளை அடித்து சொத்து சேர்க்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. உங்கள் பணத்தைக் கொள்ளை அடித்து நான் என்ன செய்யப் போகிறேன்?

இவ்வாறு ஜெயலலிதா பேசினார். ★

## ராமாவரம் தோட்டம் கொடியவர்களின் கூடாரமா?

இந்துக்களுக்கு ஆலயம். இஸ்லாமியருக்கு மசூதி கிறிஸ்தவர்களுக்குத் தேவாலயம்.

அதுபோல நமக்கு எல்லாம் ராமாவரம் தோட்டம் இருக்கிறது.

அத்தோட்டம் இன்று கொடியவரின் கூடாரமாக இருக்கிறது.

புரட்சித் தலைவரின் ராமாவரம் தோட்டத்தை புரட்சித்தலைவி மீட்டுத்தர வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் சவுந்தரராசன் கேட்டார்.

அதை மீட்கும் அதிகாரம் என்னிடம் இல்லை.

புரட்சித்தலைவர் லட்சோப லட்சம் ஏழைகளின் இதயங்களில் கோவில்கொண்டுவாழ்ந்தார்; இன்றும் வாழ்கின்றார். அந்த ஏழைகளின் இதயமாம் ஆலயத்தை வேண்டுமானால் மீட்டுத்தருகின்றேன்—

...அ. தி. மு. க. (ஜெ) கூட்டத்தில் புரட்சித் தலைவி ஜெயலலிதா. ★

## கலைஞரின் ஊழல் இல்லாத சத்தான உணவு

தி. மு. க. ஆட்சிக்கு மீண்டும் வந்தால் சத்துணவுத்திட்டம்தொடர்ந்து செயற்படும்.

ஊழல் இல்லாத சத்தான உணவு வழங்கப் படும்.

இலங்கைத் தமிழன் அலறித்துடிக்கிறான். நாம் கையைப்பிசைந்து கொண்டிருக்கிறோம். 20மைல் தூரத்துக்கு அப்பால் நிற்கும் தமிழன் வீரம் அப்படி. 20 மைல்களுக்கு இங்கே இருக்கும் நமது நிலை இப்படி.

தமிழா நீ திருந்தும் காலம் வருமா? வராதா? அது உன் தலைஎழுத்தைப் பொறுத்தது.

—தஞ்சை தி.மு.க.கூட்டத்தில் கலைஞர் கருணாநிதி. ★

## ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் பெண் முதலமைச்சர்கள் இல்லை யாது.

தமிழ்நாட்டில் ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு என்று இருந்தார் ஜானகி அம்மாள்.

நடனமாது ஜெயலலிதா சொன்னார் என்பதற்காக ஜானகி அம்மாள் அரசை ராஜீவ் காந்தி கலைத்துவிட்டார்.

—சென்னைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் வி.வி. சாமிநாதன். ★

## அரசியல் போதிக்கும் அற்ப புழுக்கள்

33 எம். எல் ஏக்களை வைத்து 97 எம் எல் ஏ.க்களை வீழ்த்திவிட்டாராம். வெற்றிப் பெருமிதம் கொள்கிறாராம் பண்ருட்டி......

33 எம் எல் ஏக்கள் கூட எதற்கு? டெல்லிக்காரனுக்கு 'மாமா' வேலை பார்த்தால் எதுவும் இல்லாமலே எவ்வளவு சக்திவாய்ந்த ஆட்சியையும் சாய்த்துவிட முடியும்! இதில் என்ன வெற்றிப் பெருமிதம்!

தமிழகமே தலைகுனிகிறது இவர்களின் தகாச்செயலுக்கு!

ஜெயலலிதாவைத் — தனிப்பட்ட முறையில் தாக்ககூடாதாம்! அரசியல் போதிக்கிறது இந்த அற்ப புழு!

தனிப்பட்ட வாழ்வை வைத்தே அரசியல் வாழ்வு நடத்தப் புறப்பட்டுவிட்ட மானங்கெட்டவர்களை வேறு எப்படி விமர்சிப்பது?

முன்னாள் அமைச்சர் காளிமுத்து. ★

## 'புரட்சி' நடத்தப் போகும் 'செல்வி'

வருங்கால முதல்வர் வருகிறார், வழிவிடுங்கள் என்ற கோஷத்தைப் பின்தொடர்ந்து மாவட்டப் பயணம் சென்ற கட்சித் தலைவியின் முகாமில் திடீரென சலசலப்பு ஏற்பட்டுள்ளது

நெருக்கமானவர்கள் அல்லது நம்பிக்கைக்கு உரியவர்கள் என்று கருதப்பட்ட பல முன்னாள் எம் எல். ஏக்கள் மற்றும் சில மாஜி மந்திரிகளுக்கு மக்களிடம் இருக்கும் கெட்ட பெயரால். தேர்தல் வெற்றி பாதிக்கப்படலாம் என்று தலைவி கவலைப்படுகிறார்

இதற்கு மாற்று என்ன? "எம் எல். ஏ அல்லது மந்திரி ஆவதற்கு முன்பும், இப்போதும் எனக்குள்ள சொத்துக்களின் விவரம் இதுதான்" என்று எல்லாரிடமும் எழுத்து மூலமான பிரகடனம் பெற்று வெளியிடப் போகிறாராம்.

மக்களின் அதிருப்திக்கு ஆளான அத்தனை பேரையும் ஓரம்கட்டி விட்டு, தலைவர் பாணியில் புதுமுகங்களுக்கு பெரும் அளவு டிக்கட் தரப் போகிறாராம். மாஜிகளுக்கு வலை ஏற்படுத்தானே செய்யு. (உ)

## 'அரண்மனை நாயாக' சிவாஜி கணேசன்

யாரிடம் சாவியைக் (காங்கிரஸ் தலைவர் பதவி) கொடுக்கக் கூடாதோ அவரிடம் சாவியைக் கொடுத்து விட்டார்கள்.

இலங்கைப் பிரச்சினையில் எம்.ஜி ஆரை பலிக்கடா' வாக ஆக்கிவிட்டார்கள். அந்த ஏக்கத்தில்தான் அவர் இறந்து போனார்.

"இவ்வளவு நாளாக இதை ஏன் சொல்லவில்லை, மடையா"— என்று என்னைக் கேட்கிறார்கள்'

நான் மடையன்தான். இவ்வளவு நாளாக அரண்மனை நாயாக இருந்துவிட்டேன்.

வெளியே வந்தபிறகு தான் நமக்கு என்று ஒரு நாடு இருப்பது தெரிகிறது.

—சென்னை சைதாப்பேட்டைக் கூட்டத்தில் சிவாஜி கணேசன். ★

## தமிழகத்திலிருந்து


யாழ். நகர. வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்து விடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான் !!



உதயசேவை

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

இலவசம்! இலவசம் !!


# எவரெஸ்ட் உச்சியில் இருந்து நேரடி ஒளிபரப்பு

திட்டமிட்டபடி எல்லாம் சரியாக இடம் பெற்றால் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி எவரஸ்ட் மலை உச்சியில் இருந்து ஒளிபரப்பப் படும் நிகழ்ச்சிகளை டெலிவிஷனில் காணலாம்.

கடல் மட்டத்தில் இருந்து எவரஸ்ட் மலையின் உயரம் 29ஆயிரத்து 028 அடி ஆகும். (8,848 மீட்டர்).

1953 இல் முதன் முறையாக எவரஸ்ட் சிகர உச்சியை மனிதன் எட்டிப் பிடித்தான்.

அந்தப் பெருமைக்குரியவர்கள் நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த சேர் எட்மன்ட் ஹிலாரி, இந்தியாவைச்சேர்ந்த டென்ஸிங்.

மனிதன் எவரஸ்டைப் பிடித்த 35 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக ஜப்பான், நேபாளம், சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மலையேறும் நிபுணர் குழு ஒன்று எவரஸ்ட் உச்சியை நோக்கிய தனது பயணத்தை இம்மாத ஆரம்பத்தில் தொடக்கியது.

இக்குழுவில் 260 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

சீனர்களுக்கு 40 வயதான டுசேனுஷிஹிகிரோ,

நேபாளிகளுக்கு 35 வயதான கொட்டா இரோனு ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

எவரஸ்ட் சிகரத்தை முதலில் எட்டிப்பிடித்த

## மே மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும்

ஜப்பான் பெண் ஜுன்கோ தாராபெய்யும் இக்குழுவில் இடம்பெற்று இருக்கின்றார்.

ஜப்பானில் உள்ள நிப்பன் டெலிவிஷன் கம்பெனியைச் சேர்ந்த மூன்று படப்பிடிப்பாளர்களும் உயர் சக்தி வாய்ந்த வீடியோ கமராக்களுடன் இக்குழுவினருடன் செல்கின்றனர்.

அடுத்த மாதம் 24 ஆம் திகதியில் இருந்து தினசரி ஒளிபரப்பு எவரஸ்ட் சிகரத்தில் இருந்து உலகுக்கு நேரடியாக அஞ்சல் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

எவரஸ்ட் உச்சியில் இருந்து நேரடிஒளிபரப்பு மே மாதம் 5 ஆம் திகதி இடம் பெறும்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான மொத்த செலவு 1 கோடி 25 லட்சம் அமெரிக்க டாலர்களாகும்.

நிப்பன் டெலிவிஷன் கம்பெனியே இதனை ஏற்றுள்ளது.

பிரதம கமராமன் சுசுமு நகமுரா 6 கிலோ எடையான வீடியோ கமராவை எடுத்துச் செல்கின்றார்.

இன்னும் இரண்டு கமராமன்கள் எடுத்துச் செல்லும் ஒளிபரப்புக் கமரா ஒவ்வொன்றும் 4. 5 கிலோ எடையுள்ளவை.

இவை அவர்கள் தலையில் போட்டிருக்கும் ஹெல்மெட்டில் பொருத்தப்பட்டிருக்கும்.

இத்திட்டத்தின் இயக்குனரான திரு. சன்ஜி இவாஷிதா சொல்கிறார்.

எனது ஒரே ஆசை, எவரஸ்ட் உச்சியில் இருந்து கமராவைச் சுழற்றி படம் பிடிக்க வேண்டும் என்பதே.

உச்சியில் இருப்பவர்கள் அல்ல முக்கியம் உச்சியில் [illegible] உலக மக்கள் அப்படியே [illegible] காண வேண்டும் என்பதுதான் முக்கியம்"– ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்த கணிதத்துறை ஈடுபாடு

**கணித மேதை இராமானுஜன் நூற்றாண்டு -4**

சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய மெட்ரிக்குலேஷன் தேர்விற்கு 1903 டிசெம்பர் மாதத்தில் ராமானுஜன் தோற்றினார். அப்பரீட்சையில் அவர் முதலாம் வகுப்பில் உயர்ந்த இடத்தைப் பெற்றுத் தேறினார். அதில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் காட்டிய திறமைக்காக அவருக்கு சுப்பிரமணியம் உபகாரச் சம்பளம் கிடைத்தது.

எவ் ஏ. (F.A) வகுப்பில் கற்க அவர் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் சேர்ந்தார். அங்கு அவர் ஆங்கிலம், கணிதம், உடலியல், சமஸ்கிருதம், வரலாறு போன்ற பாடங்களைக் கற்றார். ஆனால் இக்காலப்பகுதியில் கணிதத்தில் அவருக்கிருந்த ஈடுபாடு அதிகரித்து வந்தது. இதனால் கணிதம் தவிர்ந்த ஏனைய பாடங்களை அவர் கவனிக்கவில்லை.

கல்லூரியில் ஏனைய பாடங்களுக்கான விரிவுரைகள் நடக்கும்போது இவர் அவற்றைக் கவனிக்காமல் கணிதத்திலேயே மூழ்கியிருந்தார். உடலியல் பாடத்தின் மீது அவர் மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தார். அப்பாடத்திற்காகத் தவளைகளை வெட்டும் செய்முறைப் பாடத்தை அவர் அறவே வெறுத்தார். முட்டை போன்ற எதுவும் உண்ணாத சைவ உணவுகாரரான இவர் இங்ஙனம் நடந்து கொண்டதில் வியப்பில்லை.

இவர் கணிதத்தில் மட்டும் காட்டிய அளவுக்கு மிஞ்சிய ஈடுபாடு காரணமாக ஆண்டிறுதித் தேர்வில் அப்பாடத்தில் 100 புள்ளிகளையும் பெற்றார். ஆனால் ஏனைய பாடங்களில் உரியபுள்ளிகளைப் பெறாமையினால் தேர்வில் சித்தியடைய முடியவில்லை.

இதுவரை கல்வியில் முதன்மையான மாணவனாகத் திகழ்ந்த அவர் தற்போதைய முழுநேரக் கணித ஈடுபாடு காரணமாக கல்லூரிக் கல்விக்கும் அதன் தேர்வுமுறைகளுக்கும் பொருத்தமற்றவராகிவிட்டார். இதனால் அவரின் சுப்பிரமணியம் உபகாரச் சம்பளத்தையும் இழந்தார்.

தேர்வில் சித்தியடையாமையால் மிகுந்த ஏமாற்றமடைந்த அவர் வேறு கல்லூரியில் சேர விரும்பினார். ஒரு நண்பரின் வற்புறுத்தலினால் அவர் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள ஒரிடத்திற்குச் சென்றார், அங்கு அவருக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவம் காரணமாக அவர் கும்பகோணம் திரும்பி தமது பழைய கல்லூரியிலேயே மீண்டும் சேர்ந்தார்.

ஆனால் வரவுக்குறைவு காரணமாக அவரால் 1905 டிசெம்பரிலும் உரிய சான்றிதழைப் பெற முடியவில்லை.

மீண்டும் கல்வியைத் தொடர்வதற்காக அவர் சென்னை சென்று அங்குள்ள புகழ்பெற்ற பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். ராமானுஜனுக்குக் கணிதத்தில் தனிச்சிறப்பான ஆற்றல் உண்டு என்பதைத் தெரிந்த அக்கல்லூரியின் அதிபர் திரு. ஜே. ஏ. யேற்ஸ் (J. A. Yates) என்பவர் அவருக்கு அரைச்சலுகைக் கட்டணம் அளித்தார். எனினும் அவர் அங்கும் விரிவுரை மண்டபத்தில் ஒரு மூலையில் ஒதுங்கியிருந்து தமது கணிதச் செய்கைகளையே மேற்கொண்டிருந்தார். அங்கு அவரின் உடன் மாணவராக இருந்த திரு. சி. ஆர். கிருஷ்ணசாமிஐயர் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

"எமது கணிதப் பேராசிரியர் ராமானுஜாச்சாரியார் அவர்கள் சிலவேளைகளில் ராமானுஜனின் கவனத்தைத் தம் பக்கம் திருப்பி கரும்பலகையில் தாம்செய்து கொண்டிருக்கும் பிரசினத்தின் அடுத்தபடியை அல்லது மிகுதிச்செய்கையைக் கூறும்படி கேட்பதுண்டு. அப்போது ராமானுஜன் பேராசிரியரின் செய்கையில் இடையிலுள்ள பலபடிமுறைகள் தேவையில்லையென்றும் ஒரேதாவில் இறுதிப் படிக்குச் சென்று விடையையும் கூறிவிடுவார். இது வகுப்பு மாணவர்களுக்கு திகைப்பையும் ஆசிரியருக்கு மிகுந்த வியப்பையும் அளிக்கும். இதனால் பேராசிரியர், ராமானுஜனைக் கரும்பலகைக்கு வந்து அவர் விடையைக் கண்டுபிடித்த முறைபற்றி விளக்கும்படி அழைப்பதுண்டு."

இராமானுஜனின் பிறிதொரு நண்பரான ஆர். இராதாகிருஷ்ண ஐயர் அவர்கள் மேலும் நெருக்கமான, சுவையான செய்திகளைக் கூறுகிறார்:-

"நான் பச்சையப்பன் கல்லூரியில் எவ் ஏ. படிக்கும் மாணவனாக 1906 - 07 காலப்பகுதியில் இருந்தேன். அப்போது மாணவர்களை பெயரின் அகரவரிசை ஒழுங்குப்படி வகுப்பில் அமர்ந்திருக்க விடுவர். இதனால் ராமானுஜன் எனக்கு அடுத்தபடியாக அல்லது அதற்கு அடுத்ததாக அமர்ந்திருப்பது வழக்கம். இங்ஙனம் நீண்டகாலம் நாங்கள் இருவரும் அருகருகே இருந்து வந்ததினால் எமக்கிடையே பழக்கம் மிகுந்து நண்பர்களானோம்."

"ராமானுஜன் அழகானவர்...... அவரின் உள்ளங்கை - மென்மையானது. அவரிடம் ஆண்களின் முரட்டுத்தன்மைகள் எதுவும் கிடையாது...... குறிப்பிடத் தக்கதாக எந்த விளையாட்டிலும் அவர் பங்குபற்றியதாக ஞாபகமில்லை.



ராமானுஜன்

"பொதுவாக ராமானுஜன் மற்றவர்களோடு நன்றாகக் கலந்து பேசுவதில்லை என நம்பப்படுவதை யான் ஏற்றுக்கொள்ளவில்லை. நகைச்சுவையான துணுக்குகளை அனுபவித்தார். தாம் அத்தகைய விடயங்களைச் சொல்லும்போது தமக்கேயுரிய பாணியில் வெளிப்படுத்துவார். தம் உள்ளங்கையை வாய்க்கு முன்னால் பிடித்துக்கொண்டு உரத்துச் சிரிப்பார்.

"பல சந்தர்ப்பங்களில் இராமாயணம் மகாபாரதம் என்பவற்றிலிருந்து பல தத்துவரீதியான விளக்கங்கள் விமர்சனங்களை அவர் கூறுவதனைக் கேட்கும் அதிஷ்டம் எனக்குக் கிடைத்தது. அவை மிகுந்த தெளிவுடையனவாக இருக்கும்"

பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது துரதிஷ்டவசமாக அவர் சுகவீனமுற்றார். அந்நிலையில் அவரைக் கவனித்துக் கொள்ள எவருமின்மையால் அவர் கல்லூரிப்படிப்பை இடைநிறுத்திவிட்டு கும்பகோணம் திரும்பவேண்டியதாயிற்று. அங்கு அவரைப் பெற்றோர்கள் கவனித்துக் கொண்டனர் எதிர்கால வாழ்க்கையில் ஒரு தொழில் தேடிக்கொள்ள அவர் எவ். ஏ பரீட்சையிலாவது தேறியிருக்கவேண்டுமென அவரின் தந்தை வலியுறுத்தினர். அதனால் அவர் டிசெம்பர் 1907 இல் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக அப்பரீட்சைக்குத் தோற்றினார். எனினும் அவரால் பரீட்சையில் வெற்றிபெற முடியவில்லை.

இங்ஙனம் அப்பரீட்சை முறைகளோடு இயைந்து போக முடியாதவராக அவர் ஆகிவிட்டார். கணிதத்துறையில் அவருக்கிருந்த தனியான முழுமையான ஈடுபாடு அவரின் கல்லூரிக்கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. இக்காலப்பகுதியில் இவரின் கணித ஆராய்ச்சிகளோ அசுரவேகத்தில் அதிகரித்தன. அப்போது அவரின் குறிப்புப் புத்தகம் (Note – Book) பக்கம் பக்கமாக நிறைந்து சென்றது.

தமது எவ் ஏ பரீட்சையில் தோல்வியடைந்த காரணத்தால் தனது தகுதியை நிரூபிக்க அவருக்கு பொருத்தமான கல்விச்சான்றிதழ் எதுவும் இருக்கவில்லை இதனால் பிற்காலத்தில் வேலைதேடி அலைந்தபோது, தமது கணித ஆற்றல் பற்றி மற்றவர்களுக்குத் தெரிவிக்க அவர் இந்தக்குறிப்புப் புத்தகங்களையே கொண்டு சென்றார்.

பேராசிரியர் ஹார்டியின் கருத்துப்படி கணிதம் என்பது ஏனைய கலைவிஞ்ஞான பாடங்களை விட இளம் வயதினர்க்குரிய ஒரு முயற்சியே, நியூற்றன் தமது 50 வயதில் கணிதத்தைக் கைவிட்டு விட்டார். கணிதத்தில் அவரின் காத்திரமான பங்களிப்பு 24 வயதிலேயே ஏற்பட்டுவிட்டது. இங்ஙனமே இந்தியக் கணிஞர் ஆரியபட்டரின் சிறந்த பங்களிப்புகள் அவரின் முப்பது வயதுக்குமுன்னரே நிகழ்ந்துவிட்டன. இங்ஙனமே ராமானுஜனும் தமது பங்களிப்பை தீவிரமாக இக்காலத்தில் மேற்கொண்டார்.

அவரின் பெற்றோருக்கு இவர் கணித ஆராய்ச்சியிலேயே தம் முழுநேரத்தையும் செலவழிப்பது பிடிக்கவில்லை தமது மகன் உபயோகமற்ற முறையில் தாள்களில் இடைவிடாமல் ஏதோ எழுதித்தள்ளி நேரத்தை மண்ணாக்குகிறான் என்பதே அவர்கள் கருத்து. எதிர்காலத்தில் உழைத்துப் பிழைக்க உதவக்கூடியவகையில் அவரின் செயற்பாடுகள் அமையவில்லையே என்பதே அவர்களின் கவலை. இத்தகைய நிலையில் அவர் பெற்றோர் கண்ணில்கூட படாமல் வீட்டில் எங்காவது மூலையில், கட்டிலின் கீழ் மறைந்திருந்து சத்தமில்லாமல் தமது ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

★ உள்ஒளி அவரை வழி நடத்தத் தொடங்கியது கணித அறிவின் எல்லையை மேலும் மேலும் விரிவடையச் செய்வதிலுள்ள மகிழ்ச்சி அவரை மேலும் மேலும் அதில் ஈடுபடத்தூண்டியது. கணித ஆராய்ச்சியைத் தொடரவேண்டுமென்ற அவா, தூண்டுதல் அவரிடம் அடக்க முடியாத ஒன்றாகிவிட்டது. எவ் ஏ பரீட்சையில் தோல்வியடைந்ததினால் ஏற்பட்ட மனச்சோர்வினாலும் அதனைத் தடுக்க முடியவில்லை தொழிலொன்றைப் பெறமுடியாத நிலைகூட அதனை நிறுத்தவில்லை வறுமையும் வாட்டமும் கூட அதனைத் தளரச் செய்யவில்லை. அவரின் கணித ஆராய்ச்சி ஆர்வம் எவ்வித சூழற் காரணிகளாலும், சமூக பொருளாதார உடலுளக்காரணிகளாலும் தடுக்கப்பட முடியாததாக வளர்ந்தது. கணித ஆராய்ச்சியே அவரின் உயிர்மூச்சாக இருந்ததெனலாம். அதனால் அவர் வாழ்வதாயின் கணித ஆராய்ச்சி நடைபெறவேண்டியிருந்தது.

★ இயற்கையான இந்த மேதைத் தன்மை ராமானுஜனிடம் இங்ஙனம் பிரகாசித்தது போல் வேறெவரிடத்திலும் சுடர் விடவில்லை.

(வளரும்)

- சு. மகாலிங்கம் -

# நற்சிந்தனை அருளிய யோகர் சுவாமிகள்

ஒரு நாட்டின் ஓர் இனத்தின், ஏன்? அகில உலகின் செல்வத்துள் செல்வமாக விளங்குகின்றவர் ஆத்ம குருவாவர். எங்கள் செல்வத்துள் மாபெரும் செல்வமாக விளங்கும் ஞானகுரு தேவர்சிவயோகர்சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப் பெற்றவர்.

'ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், முழுதும் உண்மை' முதலிய மகாவாக்கிய உபதேசம் பெற்றவர். 'உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம்' என்பது அன்னார் பெற்றுக்கொண்ட மற்றோர் உபதேச மந்திரமாம். 'இதனை அடிக்கடி சொல்லிக் கொள்; எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்' என்பது குருவின் ஆணை.

யோகர்சுவாமிகள் ஆசான் அருளால் ஆசானானவர். அவரை இன்று ஆசானாகக் கொண்டு இலங்கை, இந்தியா, மலேசியா, அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா முதலிய அனைத்துலகிலும் வாழும் ஆயிரம் ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் தொண்டு புரிகின்றனர் உயர் ஆத்மநெறியை போதிக்கின்றனர்.

'ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவசித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவ. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது, தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்'.

இவை சிவயோகர் சுவாமிகள் எம் பொருட்டு அருளியவை. யோகர்சுவாமிகள் காலந்தோறும் உபதேசித்தவை கணக்கிலடங்கா. அவை யாவற்றையும் ஒன்று திரட்டிய அருநிதியமாக விளங்குவது நற்சிந்தனை. அது ஆங்கிலத்திலும் உளது. அதனால் அகில உலகிலுள்ளார் பற்பலர் சுவாமிகளின் உபதேசத்தை இன்றும் நேரே பெற்று அநுபூதிமான்களாக அல்லல் தரும் தொல்லைப் பிறவி நோயில் நீங்கி 'உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம்' என்னும் உணர்வோடு வாழ்கின்றனர். குருவே இறைவன். இறைவனே குரு. அவர் வாக்கு இறைவாக்கு. இவ்வாற்றால் நற்சிந்தனைப்பாக்கள் இறைவன் மொழிகள் நமக்கு வந்த, வருகின்ற இடர்களைக் களைகின்ற மந்திரசக்தி நற்சிந்தனைப்பாக்களுக்கு உண்டு.

எதிர்வரும் 29 ஆம் திகதி யோகர்சுவாமிகள் குருபூசை இன்று (26 - 3 - 88) முதல் மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் ஆச்சிரமம் வாழ்வு விரதமும் நற்சிந்தனைப் பாராயணமும் நடைபெறுகிறது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

'எந்நாளும் நல்லூரை
வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம்
போமே'
'பஞ்சம்படை
வந்தாலும்
பாரெல்லாம்
வெந்தாலும்
அஞ்சுவோமோ
நாங்களடி-கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி',
'நல்லூரைக்
கும்பிட்டு நீ பாடு
அதனாலே
[illegible]டிலுள்ள
பிணிகள் ஓடும்'

இவ்வாறு கூறியவர், 'நவநவமாய் வரும்சேதி- நாம் காண நல்லூர்க்குப்



சிவயோக சுவாமிகள்

போவோய்; போம் வியாதி' என்கின்றார். சேதி - செய்தி.

சாதாரண மக்கள் பேச்சுமொழியில் பேசும், ஏசும், எழுதும், பாடும் சுவாமிகள், அதே பாணியில் 'தங்கமே!' என விளித்துப் பாடியவை ஆழ்ந்த கருத்துச் செறிந்தவை. நகைச்சுவை நல்கி நன்றாகச் சிந்தித்துத் தெளிய வைப்பவை.

'தட்டா விடத்துச்
சென்று தங்கத்தாலே
தாலி செய்து
கட்டாமற்
கட்டினேனடி-தங்கமே
காரணத்தைக்
கண்டேனடி,'
'பட்டால்பா
வாடைசெய்து பதிபசு
பாசமென்னும்
மொட்டாக்கைப்
போட்டுக்கொண்டேன்-
தங்கமே
முழுவதும் உண்மையடி'
'ஊருமிலான்
பேருமிலான்
உடன் பிறந்தார்
சுற்றமிலான்
ஆருமிலாவனைத் -
தங்கமே
ஆர்தான் அறிவாரடி'

இத்தகைய அருள்அமுதந் தந்த நற்சிந்தனையை வழங்கிய சுவாமிகள் கிழக்கிலங்கையிலும் வட இலங்கையிலும் சிவதொண்டன் நிலையங்களைத் தாபித்த தீர்க்கதரிசியாவர்.

'எண்ணுவார் நெஞ்சில்
நண்ணுவான் ஈசன்'

என்னும் அருள்வாக்கைத் தாரகமாகக் கொண்ட சிவதொண்டன் பத்திரிகை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக வெளிவருகின்றது. குருபூசைமலர் இம்மாதம் வந்துள்ளது. அது 'எங்களை ஆள் குருநாதா - நின் இணையடி பணிந்திட வரந்தா' என்றது. நற்சிந்தனை பசனத்திலும் உளது. அவற்றுள் ஒன்று வருமாறு;

'ஆண்டவனையன்றி வேறொரு பொருளுமில்லை. அனைத்தும் அவன் செயல். உனது சுமை முழுவதையுந் திருவடிக்கீழ் இறக்கிவைத்து இளைப்பாறு. கவலைக்கு இடங்கொடாதே. நான் செய்தேன், அவன் செய்தான் என்று நலியாதே, விழித்திரு.

மேலும், 'சிந்தித்துச் சிந்தித்துக் கீழ்மையான குணங்களைப் போக்கி, மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக' இவ்வாறெல்லாம் எமக்கு அருளி வாழ்வளிக்கும் குருதேவரை வணங்கி பேரின்பப்பெருவாழ்வெய்துவோமாக.

- க. கணபதிப்பிள்ளை -

# புதுமைப் புரட்சியில் உருவான இன்றைய செக்கோஸ்லோவாக்கியா!

செக்கோஸ்லோவாக்கியா என்றதும் நினைவில் வருவது என்ன? தமிழாய்வு ஆர்வலர்களுக்குப் பேராசிரியர் கமில் ஸ்வெலபில். இலக்கிய வாதிகளுக்கு ஜூலியஸ் ஃபூசிக் மற்றும் காஃப்கா. மோட்டார் யந்திரப்பிரியர்களுக்கு ஜாவா, ஸ்கோடா.

இந்த நினைவுகளெல்லாம் உண்மையில் அந்த மகத்தான தேசத்தின் ஒவ்வொரு பரிமாணத்தின் அடையாளங்களே ஆகும். செக்கோஸ்லோவாகியா இன்று பொருளாதார வளர்ச்சியடைந்த ஒரு முன்னணி நாடு. கல்வி, கலை வளர்ச்சியிலும் உலகநாடுகளுக்கு முன்னுதாரணமாய்த் திகழ்வது. அடுத்த நூற்றாண்டை எதிர்நோக்கும் நம்பிக்கையும், உலக சமாதானத்திற்கான அயரா முயற்சிகளுங் கொண்டு மிளிர்வது.

**செக்கோஸ்லோவாக்கிய சோஷலிசக் குடியரசின் நாற்பதாண்டு நிறைவு இப்போது கொண்டாடப்படுகின்றது அந்த நாட்டிற்கும் இலங்கைக்கும் பல ஒத்த தன்மைகள் உள்ளன.**

உலக தொழிற்சங்க மற்றும் மாணவர் இயக்கங்களின் வளர்ச்சியில் அதன் பங்களிப்பு முக்கியமானது. சோஷலிஸக் கொள்கைத் திசையமைவுகளைப் பொறுத்தளவில் உலக அரங்கில் சோவியத் நாட்டின் தோழனாய் அமைவது சோஷலிஸ சமுதாய அமைப்பானது வழங்கக்கூடிய சகல பயன்களையும் உத்தரவாதங்களையும் முன்னேற்றங்களையும் செக்கோஸ்லோவாக்கிய மக்கள் உரிமை கொண்டுள்ளார்கள்.

சரியாக நாற்பதாண்டுகளுக்கு முன்- அதாவது 1948: பெப்ரவரியில் நிகழ்ந்தேறிய ஒரு புதுமையான புரட்சிதான் இவ்வளர்ச்சியின் வித்தாய் அமைந்தது. உலக சரித்திரத்திலேயே முதல் தடவையாக பழையஜனநாயக பாரம்பரியங்களைக் கொண்ட நாடொன்றில்— அதன் அரசியல் சட்டமும் நாடாளுமன்ற நடைமுறைகளும மதிக்கப்பட்ட அதேவேளையில்- ஒரு சோஷலிஸப்புரட்சி வெற்றிகரமாக நிகழ்ந்தேறியது. தொழிலாளர், விவசாயிகள், புத்திஜீவிகளின் இந்தப் புரட்சியானது சுரண்டல்களும் பேதமற்ற ஒரு புதிய சமுதாயத்திற்கான அடிப்படையினை அமைத்ததென்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

செக் மற்றும் ஸ்லோவாக் ஆகிய சமத்துவமான இரு குடியரசுகளின் சமஷ்டியே செக்கோஸ்லோவாக்கியா. இரண்டு இனத்தவர்களும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்கள். ஏறத்தாழ ஒன்றரைக்கோடி மக்கள் தொகையைக் கொண்ட நாட்டில், செக் மக்கள் தொகை ஸ்லோவாக்கியரைப்போல இருமடங்கினதாகும். இரண்டு இனங்களின் சமத்துவமும் உரிமைகளும் அரசியல் யாப்பிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. விதந்து குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு அம்சம் என்னவெனில், 75 வயது நிரம்பிய பிரபல அரசியல் தலைவரும், செக்கோஸ்லோவாக்கியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினருமான செக்கோஸ்லோவாக்கிய ஜனாதிபதி குஸ்தாவ் ஹீஸாக், ஸ்லோவாக்கைச் சேர்ந்தவர்.

இயற்கை வளமிக்க இந்நாடு ஏறத்தாழ ஒன்றேகால் லட்சம் சதுரக் கிலோமீற்றர் பரப்புடையது. கன்னியா வெந்நீரூற்றுக்களை ஒத்த இயற்கையான வெப்பதாது நீரூற்றுக்களுக்குப் பெயர்பெற்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட இவ்வூற்றுக்கள் பல்வேறு பிணிகளையும் நீக்கி இளமையும் வலிவும் தரத்தக்கவையாயும சஞ்சாரிகளைக் கவர்வனவாயும் விளங்குகின்றன.

ஐந்தாம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பமாகிறது. செக்கோஸ்லோவாக்கியாவின் சரித்திரம். 10 ஆம் நூற்றாண்டிலிருந்து அந்நாட்டின் [illegible]லாயிற்று; கல்விக்கும் கலைகளுக்கும் ஒரு கேந்திர ஸ்தானமாக அது மதிக்கப்படலானது. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து சில பின்னடைவுகள் பிரதிபலிக்கப்பட்டன வெனினும், சோவியத்நாட்டில் இடம்பெற்ற மகத்தான அக்டோபர் புரட்சியின் பலனாய் தொடர்ந்த மூன்று தசாப்தங்களின் போராட்டங்களினூடாக, இத்தேசம் சகல நுகத்தடிகளினின்றும் தன்னை நீக்கி விடுதலைகொண்டது

செக்கோஸ்லோவாக்கியக் கலைமரபு, உயர்ந்த பாரம்பரியங்களினடியாக—செக் மற்றும் ஸ்லோவாக் கலாசாரங்களின் கலப்பாலும் கூட்டுறவாலும் பிறந்தது.

இந்த இருவழிக் கலாசாரத் தொடர்புகள் இரண்டு இனங்களையும் இணைக்கவும். ஒன்றிணைந்த போராட்டங்களை முன்னெடுக்கவும் வழிவகுத்ததாய்க் கருதப்படுகிறது. தேசிய எழுச்சியானது தேசிய கலாசாரங்களின் புத்துயிர்ப்பிற்கும் வழிகோலிற்று. கலை இலக்கியங்களின் உன்னதம் இந்த நூற்றாண்டிற்கும் தொடர்ந்துவந்தது முன்னணி எழுத்தாளர்களும் கலைஞர்களும் தேசிய எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களாய் அமைந்ததோடு சோஷலிஸக் கலாசார மலர்ச்சிக்கும் வழிகோலினார்கள்.

செக்கோஸ்லோவாக்கியாவின் இலக்கியம், இசை, சினிமா, கட்டிடக்கலை, ஓவியம், நடனம், நாடகம், பொம்மலாட்டம், கண்ணாடி-பீங்கான், கலைகள் போன்றவற்றையும் மற்றும் பல நுண்கலைகளும் உச்சங்களைக் கண்டவை. சகல நாடுகளுடனும் கலாசார ஒத்துழைப்பு, பரிமாற்றம் என்பது செக்கோஸ்லோவாக்கியாவின் வெளியுறவுக் கொள்கைகளில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாயுள்ளது.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்செக் ஓவியரான லாடிஸ்லாங் கரோலெக், தமது இலங்கை விஜயத்தின் போது தவறாமல் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்திருந்தார். இந்நாட்டின் சாதாரண மக்கள் தம்மை மிகக் கவர்ந்ததாகக்குறிப்பிட்ட அவர், தமது இலங்கை விஜயமானது மாறுபட்ட பிரதேசங்களைத் தமக்கு அறிமுகப்படுத்தியதுடன், ஓவிய உத்திகளைப் பரீட்சிக்கும் வாய்ப்பையும் தமக்களித்ததாகக் கூறினார்.

இலங்கையும் செக்கோஸ்லோவாக்கியாவும் பல விதங்களில் ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ளன—பாரம்பரியம், வளம், இனநிலை, சுதந்திரமடைந்த காலம் என்று. ★

- சாந்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம். ஜி. ஆர் பற்றி கன்னடத்துப் பைங்கிளி

ஊட்டியில் படப்பிடிப்பு நடந்து கொண்டு இருந்தது.

கடுங்குளிர் கன்னடத்துப் பைங்கிளி என்றழைக்கப்பட்ட சரோஜாதேவி கதாநாயகியாக நடித்துக்



எம். ஜி. ஆர்

கொண்டு இருந்தார்.

வெட வெட என்ற குளிர் தாங்க முடியாது பைங்கிளி கஷ்டப்பட்டது.

கூட நடித்த இன்னொரு நடிகை இதைக் கவனித்தார்

'இதை (மது) அருந்துங்கள். குளிர் போய் விடும். உடம்பு சூடாகி விடும்''- இப்படி சரோஜா தேவியிடம் அந்த நடிகை தெரிவித்தார்

இந்த உரையாடலை அருகில் இருந்த எம். ஜி. ஆர். கேட்டு விட்டார்.

அந்த நடிகையை அழைத்துச் சென்று நன்ருக ஏசி விட்டார் எம். ஜி. ஆர்.

அந்தக்குளிரில் வியர்த்தபடி வந்தார் அந்த நடிகை.

இப்படி நடிகை சரோஜாதேவி சொன்னுர்.

## விஜயகாந்த் ராதிகாவை காதல்!

விஜயகாந்த் ராதிகாவை கட்டித்தழுவி ஆடிப்பாடிய காதல் காட்சி மதர் லேன்ட் பிக்சர்ஸ் கோவைத் தம்பி தயாரிக்கும் ''உழைத்து வாழ வேண்டும்'' படத்துக்காக ஓய்.எம்.சி.ஏ கார்டனில் படமாக்கப்பட்டது.

வேகமாக வளர்ந்து வரும் இந்தப்படத்தை அமீர் ஜான் இயக்க, லியாகத் அலிகான் கதை,வசனத்தை எழுதுகிருர். ★

## கலைஞரின் வசனத்தில் எம். ஜி ஆர். நடித்த படங்கள்

| | | |
|---|---|---|
| 1. ராஜகுமாரி | இயக்குனர் | ஏ எஸ். ஏ. சாமி |
| 2. அபிமன்யு | ,, | சோமு |
| 3. மந்திரகுமாரி | ,, | எல்லிஸ் ஆர்.டங்கன் டி. ஆர். சுந்தரம் |
| 4. மருதநாட்டு இளவரசி | ,, | காசிலிங்கம் |
| 5. நாம் | ,, | காசிலிங்கம் |
| 6. மலைக்கள்ளன் | ,, | ஸ்ரீ ராமுலு நாயுடு |
| 7. புதுமைப்பித்தன் | ,, | டி. ஆர். ராமண்ணு |
| 8. அரசிளங்குமரி | ,, | ஏ. எஸ். ஏ. சாமி |
| 9. காஞ்சித்தலைவன் | ,, | காசிலிங்கம் |
| 10. எங்கள் தங்கம் | ,, | கிருஷ்ணன் பஞ்சு |

தொகுப்பு: ப. பாலமுகுந்தன்

# பத்திரிகையில் வரும் 'கிசுகிசு'வும் படத்தில் வரும் 'காபரே டான்ஸும்' ஒன்றே

## நடிகை ஸ்ரீதேவி மனந்திறந்து பேட்டி

கேள்வி: பேட்டி கொடுப்பதைத்தவிர்த்து வருகின்றீர்கள் என்று கூறப்படுகின்றதே!

ஸ்ரீதேவி: நான் ஏன் பத்திரிகையாளரைத் தவிர்க்க வேண்டும்? ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

கேள்வி: பத்திரிகைகளில் உங்களைப்பற்றி கிசுகிசு நிறைய வருகின்றதே. அதுபற்றி கவலைப் படுகின்றீர்களா?

ஸ்ரீதேவி;- இப்போது கவலைப் படுவதில்லை. ஆரம்பத்தில் பதற்றப் பட்டேன் சில கிசுகிசுக்கள் என்னைப் பைத்தியமாக்கியும் விட்டன.

இப்போது அவற்றை நான் சர்வசாதாரணமாக எடுத்துக் கொள்கின்றேன்.

பத்திரிகைகளில் வரும் கிசுகிசுக்கள் திரைப் படத்தில் வரும் காபரே டான்ஸ் போன்றவை.

கேள்வி:- உங்கள் விவகாரத்தில் அம்மா அதிகம் தலையிடுவதாகவும் படத்தயாரிப்பாளர்களுக்கு நிபந்தனைகள் போடுவதாகவும் கூறப் படுகின்றதே!

ஸ்ரீதேவி: குழந்தையின் நலன்களைப் பாதுகாக்கும் உரிமை ஒரு தாய்க்கு உண்டு என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்தானே! என்னைப் பொறுத்த வரை எனக்கு அம்மாவே தான் சகலதும்:

நான் குழந்தை நட்சத்திரமாக இருந்தசமயம் அம்மாதான் என்னைக்



ஸ்ரீதேவி

கொளுத்தும் வெய்யிலில் தூக்கிக்கொண்டு படப்பிடிப்புக்குக் கொண்டு சென்ருர்.

என்னை நட்சத்திரமாக்க அம்மா தான் படப்பிடிப்புக் கம்பெனிகளின் படிகளில் ஏறி இறங்கியவர்.

அம்மாவுக்குக் குதிரையின் அறிவு உண்டு. எது சரி எது கூடாது என்பது அவருக்குத் தெரியும்.

கேள்வி: தென் இந்தியாவில் நீங்கள் கவர்ச்சி நடிகை என்ற பெயரைப் பெறவில்லை.

ஹிந்திப் படவுலகில் தான் கவர்ச்சி காட்டி நடிக்கின்றீர்கள். உங்களுடைய பாத்திரங்களை சரியாகத் தெரிவுசெய்யக்கூடாதா?

ஸ்ரீதேவி: உங்களின் கருத்தை ஏற்றுக்கொள்கின்றேன். என்னுள்ள திறமையைப் பிரதிபலிக்கக்கூடிய பாத்திரங்கள் எனக்குக் கிடைப்பதில்லை.

நான் இன்று பணம் சம்பாதிக்கின்றேன். இந்த நட்சத்திர அந்தஸ்து கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

எனது வானம் பிரகாசமாயுள்ளது. எப்போது முகிற் கூட்டம் வந்து மறைக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே சரியான பாத்திரம் வரும் என்று காத்திருக்கமுடியாது.

கேள்வி: சிறு வயதில் இருந்து நடித்துவருகின்றீர்கள். போரடிக்கவில்லையா?.

ஸ்ரீதேவி: பத்திரிகைத் துறையில் உங்களுக்கு 'போர்' ஏற்பட்டுள்ளதா? அப்படி ஏற்பட்டுள்ளது என்று சொன்னுல், உங்கள் தொழிலில் உங்களுக்கு அக்கறை இல்லை என்றுதான் அர்த்தம். அதுபோன்றுதான் நடிப்பதும்.

கேள்வி: திருமணமாகிக் குடும்ப வாழ்க்கை நடத்தும் எண்ணம் உண்டா?

ஸ்ரீதேவி. ஏன் இல்லை! நான் இப்படியே கன்னியாக இருக்க முடியுமா? சரியான ஆண் வரும் வரை காத்து இருக்கின்றேன் திருமணங்கள் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப் படுகின்றன.

எனக்கு வரும் கணவனுக்கு இருக்கவேண்டிய ஒரேஒரு தகைமை, அவர் என்னில் மட்டும் அக்கறை காட்டவேண்டும் என்பதே.

அவரை இன்னொருத்தியுடன் நான் பங்குபோட முடியாது.

அவர் எனக்குரியவராக, என்னுடையவராக மட்டுமே இருக்க வேண்டும்.

சரியானவர் வந்தால் திரைப்படத்துறையை விட்டு விலகிவிடுவேன். திருமணமான பின்னர் ஒருநாளும் சினிமாவில் நடிக்கமாட்டேன். சுவாசமான மனைவி, அன்புள்ள அம்மா ஆகவே இருப்பேன்.

கேள்வி: குழந்தைகளிடத்தில் உங்களுக்கு அலாதி விருப்பமாமே?

ஸ்ரீதேவி: நிறையக் குழந்தைகளைப் பெறவே விரும்புகின்றேன். அது சாத்தியமானதா?

## கவர்ச்சி நடனம்

குடிப்பழக்கமும், பெண்களின் தொடர்பும் உள்ள ராதாரவியைத் தன்னுடைய வலையில் சிக்கவைக்க திட்டமிட்டார் டிஸ்கோ சாந்தி ஒருநாள் அவர் நினைத்தது நடந்தது ராதரவி. அவரது வலையில் வீழ்ந்தார். வீடுமுழுவதும் ஆட்டமும், பாட்டமும், குடியும் கும்மாளமுமாக இருந்தது.

''புதுரோசா அள்ளு மெதுவாக கிள்ளு ஜிகிஜு ஜிகிஜு'' என்று பாட்டுப் பாடி ராதாரவியைக் கட்டி அணைத்து கவர்ச்சி நடனம் ஆடினுர் டிஸ்கோ சாந்தி.

இப்படி ஒரு காட்சி கலைமகள் பிக்சர்ஸ் 'அத்தனைபேரும் உத்தமர் தானு' என்ற படத்துக்காக படமாக்கப்பட்டது.

பாண்டியன், மோகன், குமார், தேவி பாலா, உதயகுமார், வி. கே. இராமசாமி, எஸ் எஸ். சந்திரன், செந்தில், சங்கிலிமுருகன், குமாரமுத்து, ஐ. எஸ், ஆர். தீபா, பிரமிளா, கோவை சரளா காந்திமதி மற்றும் பலர் நடிக்கும்இந்தப்படத்தை கே. பொன்னையா டைரக்ட் செய்கிருர்.

இசை: சண்ணன் லதா

## வெள்ளித்திரை

''காளிச்சரண்'' படத்தில்

## கார்த்திக ஜோடியாக புதுமுகம் கவுதமி!

ராஜா டைரக்ட் செய்யும் 'காளிச்சரண்' படத்தில் கார்த்திக் ஜடியாக புதுமுகம் கவுதமி நடிக்கிருர்.

### காளிச்சரண்

முரளி சினி ஆர்ட்ஸ் தயாரிக்கும் ''காளிச்சரண்'' படத்தை கதை, திரைக்கதை எழுதி ராஜா டைரக்ட் செய்து வருகிருர் அல்லவா?

இந்தப்படம் வேகமாக வளர்ந்து வருகிறது, இரவுபகலாக படப்பிடிப்பு நடக்கிறது.

### புதுமுகம் கவுதமி

இதில கார்த்திக் ஜோடியாக புதுமுகம் கவுதமி நடிக்கிருர். இருவரும் சம்பந்தப்பட்ட காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன.

இவர்களுடன் சரண்ராஜ் பாபு ரி, எஸ்.எஸ். சந்திரன் செந்த், ஜெய்கணேஷ் சின்னி ஜெயந்த் நாசங்கர், மாஸ்டர் சுரேன்குமார் மற்றும் பலர் நடித்துவருகிருர்கள்.

### விஜய்கிருஷ்ணராஜ்

எச் முரளி தயாரிப்பில் வளரும் 'காளிச்சரண்' படத்தின் ஒளிப்பதிவை கே.என் செல்வராஜ் கவனிக்க வசனத்தை விஜய்கிருஷ்ணராஜ் எழுதுவதோடு முக்கியவேடத்திலும் நடிக்கிருர் சந்திரபோஸ் இசையமைக்கிருர்.

## ஊக்கம் மிக்க வீரர்களைக் கொண்ட யாழ். கனகரத்தினம் ம.ம.வி அணி

## விளையாட்டுத் துறை

வட பகுதியில் உள்ள பாடசாலைக் கிரிக்கெட் அணிகளை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகின்ளும்.

அந்த வரிசையில் இன்று இடம் பெறுவது யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி

நீண்ட வருட கால இடைவெளிக்குப் பின் அதிபரின் விடாமுயற்சியால் இந்தப் பாடசாலை தனது அணியைக் கடந்த வருடம் தயார் செய்தது.

ஆனுலும் சென்ற வருடம் ஏனைய பாடசாலை அணிகளுடன் போட்டியிடக்கூடிய நிலை ஏற்படவில்லை.

எனினும் சில விளையாட்டுக் கழக அணிகளுடன் சிநேகபூர்வமான முறையில் பயிற்சி ஆட்டங்களில் பங்கு கொண்டது.

இந்த அணி இம்முறை ஏனைய கல்லூரி அணிகளுடன் ஆடுவதற்குத் தயார்படுத்தப்பட்டுள்ளது.

கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலய அணியை ஊக்கம் மிக்க வீரர்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

கே. சுமந்திரன்: அணியின் தலைவர். வலதுகை நடுத்தரவேகப்பந்து வீச்சாளர். வலதுகை துடுப்பாட்ட வீரர். சிறந்த பந்துத் தடுப்பாளர்.

ஏ அருட்செல்வன்;- அணியின் உபதலைவர் வலதுகை, ஆரம்ப, வேகப்பந்துவீச்சாளர், வலது கை துடுப்படி வீரர்.

எஸ். கிருபாகரன்:- நின்று நிதானமாக ஆடும் வலதுகை துடுப்படி வீரர். அணியின் நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் வலதுகை நடுத்தர வேகப்பந்து வீச்



சுமந்திரன்

சாளர். சிறந்த பந்துத் தடுப்பாளர்.

எல். ஆர். ரொனி;- வலதுகை நடுத்தரவேகப் பந்துத் வீச்சாளர். வேகமாக ஓட்டங்களைச்சேர்க்கும் வலதுகை துடுப்

எம். மலரன்பன்:- வலதுகை சுழல் பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்டவீரர். சிறந்த பந்துத் தடுப்பாளர்.

எம். நிக்ஸன்:- நின்று நிதானமாக ஆடும் வலதுகை ஆரம்ப துடுப்பாட்டவீரர்.

பிரகாஷ்:- இடதுகைத் துடுப்பாட்ட வீரர், இடதுகை நடுத்தர வேகப்பந்து வீச்சாளர்.

பி. ஸ்ரீரமணன்:- சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர்

ரி. சதீஸ்;- நின்று ஆடும் வலதுகை துடுப்பாட்ட வீரர் அணியின் மேலதிக விக்கெட்காப்பாளர்.

ரி. கிரேஸ்:- இடதுகை துடுப்பாட்ட வீரர், நடுத்தரவேகப் பந்து வீச்சாளர் பந்து தடுப்பாளர்.

என் சதீஸ்:- நிதான

- சண். ஜோன்சன் -

பாட்ட வீரர் சிறந்த பந்து தடுப்பாளர்.

கே. இராகுலன்:- அணியின் விக்கெட் காப்பாளர், ஆரம்ப துடுப்பாட்டக்காரர்.

எஸ். சுரேந்திரன்:- வலதுகை வேகப்பந்து வீச்சாளர், சிறந்த வலதுகைத் துடுப்பாட்டவீரர் சிறந்த பந்துத்தடுப்பாளர்.

இந்த அறுவரும் கடந்த ஆண்டு தயார் படுத்தப்பட்ட அணியில் இடம்பெற்றவர்கள்.

இனி வருபவர்கள் அணிக்கு புதுமுகங்கள்.

மாக ஆடும் வலதுகை துடுப்பாட்ட வீரர்.

எஸ் கண்ணன்:-வலதுகை துடுப்பாட்டவீரர், இடதுகை வேகப்பந்து வீச்சாளர்.

ஜி. சுரேந்திரன்.- வலதுகை துடுப்பாட்ட வீரர், வலதுகை மந்திய வேகப்பந்து வீச்சாளர்.

இந்தப் பாடசாலையின் பழைய மாணவர் திரு. வி. கே. சண்முகலிங்கம் அணிக்கான பயிற்சிகளை அளித்து வருகிருர்.

அணியின் பொறுப்பாசிரியர் திரு. வி. மகேந்திரன் பொறுப்பில் பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. க. வை. தனேஸ்வரன் அணியை சிறப்பாக வழி நடத்துகின்ருர்.

# மக்களிடம் மதநம்பிக்கை இல்லை; நாட்டில் மதசுதந்திரம் உண்டு!

## நேர்முகம்

விடியற்காலை மூன்றரை மணியிருக்கும். அந்த விடுதியின் கதவுகள், யன்னல்கள் எல்லாம் ஒன்ருேடு ஒன்று மோதி அடித்துக்கொண்டன. திடுக்கிட்டு விழித்த நான் படுக்கையில் சரிந்த நிலையில் இருப்பதை உணர்ந்தேன்

அப்போது தான் பூமியதிர்ச்சிஏற்பட்டுள்ளதை உணர்ந்து பிள்ளைகள் தூங்கிக் கொண்டிருந்த அறைக்கு ஓடினேன். நாம் வாழ்ந்த ஐந்து மாடிக் கட்டிடம் சரிந்து ஆடியது. கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக் கொண்டு மனைவி பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வெளியே வந்தோம். ஆனுல் வெளியில் அமைதியாக மக்கள் கூடியிருந்தனர். பனியிலும் பரபரப்பாலும் எனது கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. மனப்பயம் நீங்கவில்லை.

இந்த நேரத்தில் என்னுடன் பீக்கிங் வானொலி நிலையத்தில் கடமைபுரியும் எனது நண்பர் தனது பிள்ளையை அயலவருடன் விட்டு விட்டு வந்தார். நோயாளியான விடுதிக் காப்பாளப் பெண்மணியும் எம்மைப் பார்க்க வந்தார். எமக்குத் தேவையான கூடாரங்களை அமைத்தும் படுக்கை வசதிகள், ஏனைய வசதிகளையும் செய்தும் உதவினர் அந்தச் சில நிமிடங்கள் நாங்கள் [illegible] திரும்புவோமா? என்ற [illegible] எழுந்தது.

ஆம் 1976. யூலை 28 ஆந் திகதி பீக்கிங் நகரத்திலிருந்து 100 மைல் தூரத்திலுள்ள தங்சாங் என்ற இடத்தில் இப்பூமியதிர்ச்சி 9 லட்சம் பேரைப் பலிகொண்டதுடன் பீக்கிங் நகரத்தையும்பாதித்தது. 18 நாட்கள் அகதிகளாக வாழ்ந்த எமக்கு அம்மக்கள் தங்கள் கஷ்டத்தையும் பாராமல் செய்த உதவியை என்னும் என்னுல் மறக்க முடியாது.

இப்படிச் சீனமக்களைப் பாராட்டினுர் பீக்கிங் வானொலி நிலையத்தில் 15 வருடங்களாகத் தமிழ்ப் பிரிவுப் பொறுப்பாளராகக் கடமை ஆற்றிய திரு வி. சின்னத்தம்பி. அவர் சஞ்சீவி வாசகர்களுக்கு அளித்த பேட்டி. இதோ:-

சீன இலக்கியம் மூவாயிரம் ஆண்டு கால வரலாறு உடையது சிங் வம்சத்தின் ஆட்சிக் காலம் (கி மு. 221 - 207) தொடக்கம் 1840 ஆம் ஆண்டில் நடைபெற்ற அபினியுத்தம் வரையான தொன்மை இலக்கியம் எனக் குறிப்பிடப்படுகின்றது. 1849முதல் 1914ம் 4 இலக்கம் வரையான காலப்பகுதியில் தோன்றிய இலக்கியம் தற்கால இலக்கியமாக [illegible] மதிக்கப்படுகின்றது. 1911ம் ஆண்டு ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான புரட்சிகர இயக்கம் ஒன்று சீனுவில் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலாசாரப் புரட்சியில் லூசுன் பிரதான தளபதியாக இருந்தார் 1921-ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது.

இதனுடன் பாட்டாளி வர்க்கம் புதியதோர் இலக்கிய இயக்கத்துக்குத் தலைமை வகிக்க ஆரம்பித்தது மாசேதுங்



வீ சின்னத்தம்பி

1942-ல் யெனானில் கலை இலக்கியம் பற்றி நிகழ்த்திய உரை புரட்சிகர சீன எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது மக்களுக்குச்சேவை செய்தல் என்பதே மாவோ வழிச் சீனக் கலை இலக்கியத்தின் நெறியாகும்

### சீனுவில் மத நம்பிக்கை

சீனுவில உள்ளூர் மதமாக தாவோ மதம் இருந்தது. புத்த மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம் ஆகியன அங்கு கடைப்பிடிக்கப் படுகின்றன.

நவ சீனுவை ஸ்தாபித்த மாசேதுங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்டுகள் மத நம்பிக்கையற்றவர்கள் ஆகவே நவ சீனுவில் பிறந்து வளர்ந்த சீன மக்கள் பொதுவாக மத நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்ருர்கள்.

ஆனுல் சீனுவின் அரசியல் யாப்பில் மத நம்பிக்கைச் சுதந்திரமும் மதத்தில் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கும் சுதந்திரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

### சீனுவின் போக்குவரத்துச் சாதனங்கள்

புகையிரத சேவை சீனப் போக்குவரத்து. ஏற்றியிறக்கலின் உயிர் நாடியாக இருக்கின்றது. இதனை விருத்தி செய்ய இடைவிடா முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. பாலங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன மின்சார புகையிரதங்களும் அங்கே ஓடுகின்றன.

பாவிப்பில் இருக்கும் நெடுஞ்சாலைகளின் நீளம் 8 லட்சத்து 90 ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேலானது. நதிப் போக்குவரத்திலும் நவ சீனு முன்னேற்றியிருக்கின்றது. சுத்துடன் கடல் மூலம் போக்குவரத்தையும் நடத்துகின்றது சீனவிமான சேவை உள்ளூரில் 200 க்கு மேலான மார்க்கங்களில் பறக்கின்றது 20 க்கு மேலான சர்வதேசிய மார்க்கங்களில் செல்கின்றது.

சீனுவில் சைக்கிள்தான் சாதாரண மக்களின் பிரதான போக்குவரத்துச் சாதனமாகும். சீன வீதிகளில் காலையிலும் மாலையிலும் கடல் அலை போன்ற சைக்கிள்களைக் காண முடியும்.

### குடும்ப அமைப்பு

சீன மக்கள் மிகுதியும் குடும்ப உணர்வுடையவர்கள். மூதாதையர்களை வழிபடும் அளவிற்கு மதிப்பவர்கள். சீனக் குடும்ப அமைப்பு இன்னும் அவர்கள் மத்தியில் வேரூன்றியிருக்கின்றது. பொதுவாக முதியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் சீன மக்கள் பெரும் மதிப்பளிக்கின்ருர்கள். மாசேதுங் தலைமையில் சீனுவில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்த குடும்ப முறையில் ஆரோக்கியமான புதிய வளர்ச்சிகளை ஏற்படுத்தின. அடக்குமுறையும் சுரண்டலும் அற்ற சமுதாயத்தில்தான் உண்மையான குடும்ப உறவுகளும் அன்பும் இருக்க முடியும் என்பதைச் சீனப் புரட்சியின் ஊடாகச் சீன மக்கள் புரிந்து கொண்டார்கள்.

- செல்வி இ. சுலோசனு -

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயிரத்தில் ஒருவன்

சஞ்சீவி சிறுகதை



ராஜனுக்குப் பெண் பார்த்துப் பார்த்து அவன் அம்மா லக்ஷ்மி சலித்தே விட்டாள்.

ஒருத்திக்கு மூக்குச் சரியில்லை என்பான், மற்றவளுக்கு வாய் சரியில்லை என்பான். இப்படியே ஏதாவது ஒரு சாக்குப் போக்குச் சொல்லி, வரும் கல்யாணங்களை எல்லாம் தட்டிக்கழித்துக் கொண்டே வந்தான் ராஜன். வயதும் முப்பத்தைந்தைக் கடந்து விட்டது இப்படியே விட்டால் அவன் குணராஜா போலவே இவனும் திருமணம் செய்யாது தனிக்கட்டையாகக் காலத்தைத் தள்ளி விடுவானோ என்ற பயம் அவன் அம்மாவுக்கு. ஒரு நாள் தன் மனப் பாரத்தை மகனுக்கு வெளியிட்டு,

'ராஜன்...! உனக்குப் பொம்பிளை பார்க்க என்னால் முடியாது. உன் மனசுக்குப் பிடிச்ச பெண் இருந்தால் சொல், கட்டி வைக்கிறேன், ஆனால் உன் அண்ணிமாரைப் போல நீ எடுக்கும் பொம்பிளையும் காதில் வைரத்தோடு போடக்கூடிய தகுதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவளாக இருக்க வேணும், இல்லையென்றால் எங்கள் குடும்பத்தில் யாரும் மதிக்க மாட்டார்கள்'

என்று ஒரு பெரிய நிபந்தனையையும் போட்டாள் பூமியில் தான் எத்தனை மாற்றங்கள், அதிலும் நம் தமிழ் மண்ணில் நாளுக்கு நாள் தோன்றும் மாற்றங்களை கவியில் வடிக்க கம்பனை அழைத்தாலும் முடியாது. எது எப்படி மாறினாலும் யாழ்ப்பாண மக்களின் இரத்தத்தில் ஊறி, கலை கலாசாரம் பேணப்படுவதுபோல் மாப்பிள்ளையை விலை பேசிச் சீதனம் வாங்கிக் கல்யாணம் செய்யும் முறையும் வேரூன்றிக் கிளை பரப்பி விட்டது. இக் கொடுமையை நினைத்து அதனைத் தகர்த்து எறிந்து சீதனம் இல்லாமற பெண்ணை எடுக்கும் முற்போக்குவாதிகளும் இல்லாமல் இல்லை.

இங்கு ராஜன் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன் இல்லாவிட்டாலும் சந்தர்ப்பம் சூழ்நிலை அவனை ஒரு முற்போக்குவாதியாக்கி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏதோ அவசரகாரியமாகத் தாய் லக்ஷ்மியைத் தேடிப் பக்கத்தில் உள்ள முருகன் கோயிலுக்குப் போனவன், அங்கு ஒரு பக்கமாக நின்று தீபாராதனை பார்த்து வணங்கியபடி நின்ற பத்மாவைப் பார்த்து விடுகிறான். பெண் பார்க்கும் படலத்தில் எத்தனையோ பெண்களைப் பார்த்துச் சலித்துப்போன அவன் கண்களுக்குப் பத்மா அன்றலர்ந்த ரோஜா மாதிரிக் காட்சியளித்தாள்.

'ஒரு நொடியில் என் மனதைப் பறித்து விட்டாளே......!'

அதிசயித்த ராஜன் அடுத்த வெள்ளியும் அதற்கு அடுத்த வெள்ளியும் என்று ஒழுங்காகக் கோயிலுக்குப் போகிறான் அம்மாலக்ஷ்மிக்குச் சந்தேகம். அதை வாய்விட்டே கேட்டு விடுகிறாள்.

'என்ன... பக்தி எல்லாம்கரைபுரளுகிறது...? ராஜன் மெதுவாகச் சிரித்துக் கொண்டான். லக்ஷ்மி தான் சந்தேகித்தது சரிதான் என்று உறுதி செய்து கொண்டாள்.

'ராஜன்... எதுவானாலும் தைரியமாகச் சொல்...?; அம்மா தூண்டினாள் ராஜன் தன் மனத்திரையில் தோன்றிய பெண்ணின் உருவத்தைப் பற்றி விவரித்தான். ஒவ்வொரு வெள்ளியும் கோயிலில் பார்க்கிறபடியால் ... அடையாளம் கண்டு கொண்டாள்.

'ஓ... அந்தப் பெண்ணைச் சொல்லுறியா...? அவள் நல்ல பெண் தான், படித்திருக்கிறாள், பெயர் பத்மா. ஆனால் வைரத்தோடு போடும் அளவுக்கு அந்தக் குடும்பம் இல்லை. இருந்தாலும் அவள் அண்ணன்மார் வெளிநாட்டில் இருக்கிறபடியால் வைரத்தோடு போட முடியுமா என்று கேட்டுப் பார்க்கிறேன்'

அம்மா லக்ஷ்மி பேசப் பேச ராஜனுக்கு ஒரே சந்தோஷம். ஆனால் வைரத்தோட்டுப் பிரச்சினை ராஜனின் இதயத்தை வருத்தியது. வைரத்தோடு போட வழியில்லை என்று அவர்கள் பின் வாங்கினால், அம்மா இந்தக் கல்யாணமே வேண்டாம் என்று மறுத்து விட்டால்......

அந்த நினைவையே அவனால் தாங்க முடியவில்லை ஒரு கணம் ஏதோவது விஷத்தைக் குடிச்சு உயிரை போக்கி விடலாமா என்று இருந்தது அவனுக்கு. மறுகணம் சீச்சீ... இது என்ன தலைபோகிற காரியமா...? வைரத்தோடு இல்லையென்றால் வாழ முடியாதா...? வாழ்க்கைக்கு தேவையில்லாத வீண் பகட்டுகளையும் வேண்டாத பிடிவாதங்களையும் தகர்த்து எறிந்து எப்படியாவது பத்மாவைக் கல்யாணம் செய்து கொள்வதுதான் என்று திடசங்கற்பம் பூண்டான் ராஜன்.

அதே நேரம் அவன் அம்மாவும் பத்மாவின் வீட்டில் இருந்து வருகிறாள். அவள்முகம்வாடி இருந்தது. ராஜன்புரிந்து கொண்டான் அம்மாவே தொடங்கினாள்.

''ராஜன்......! வைரத்தோடு மட்டுமல்ல ஒரு கல்யாணப் பெண்ணுக்கு வேண்டிய நகைகள்கூட அவளிடம் இல்லை, ஏதோ இரண்டுசோடிக்காப்பும், தோடுந்தான் வைச்சிருக்கிறாளாம். வெளிநாட்டில் உள்ள இவள் அண்ணன்மார் தாங்களும் தங்கள் குடும்பமும் என்று இருக்கிறார்களே தவிர இவளுக்கு ஒரு நகைநட்டுத் தேடிக் கலியாணம் செய்துவைக்க வேணும் என்ற எண்ணம் கூட இல்லையே...? என்ன மனுஷங்களோ...!''

தன் மனசுக்கு நியாயம் என்று தோன்றியவையைச் சொல்லிப் புலம்பினாள் ராஜனின் அம்மா.

ஆனால் ராஜனின் மனமோ தனக்கு பாங்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று மனக் கணக்குப் போட்டது. நேரத்தைப்பார்த்தான். காலை ஒன்பது பத்து. வெளியில் போட்டுவருகிறேன் என்று சொல்லி தன் மோட்டார் சயிக்கிளை எடுத்தவன் நகரின் பிரபல்யமான நகைக் கடையின் முன்னால் நின்றான். அம்மா சொன்ன அந்த வைரத்தோடு குறைந்தது இருபதினாயிரம் ரூபா சொன்னான் கடைக்காரன்.

ராஜன் தயங்கவில்லை. அவன் மனத்திரையில் பத்மா மறுபடியு வகதாள், இப்போது நகைகள் எல்லாம் பூட்டி பட்டுச்சேலை கட்டி, அழகிய மணமகளாகவே வந்து ராஜனை நிலைகுலையச் செய்தாள்.

வைரத்தோட்டுடன் அட்டியலுக்கும் சேர்த்து 'ஓடர்' கொடுத்தான் ராஜன். அதற்கான பணத்தில் பாதியை ''பாங்செக்'' ஆக எழுதிக்கொடுத்து மிகுதிப் பணம் நகையை எடுக்கும்போது தருகிறேன் என்றான். பின் நண்பன் ரமேஷின் நினைவு வர அவன் வீடு நோக்கிப் போனான்.

''ரமேஸ்......! உன்னட்டை ஒரு உதவி வேண்டி வந்திருக்கிறேன்''...

எனக்கூறித் தயங்கிய ராஜனை, தன் ''ஒபீஸ் ரூம்'' திறந்து அதற்குள் அழைத்துச் சென்றான் ரமேஸ். தனி அறையில் தன் மனதில் பதிந்து விட்ட பத்மாவைப் பற்றிய எண்ணங்களைக் கொட்டுகிறான் ராஜன்.

''எடமடையா...நகை நட்டு வீடுவளவுடன் பொம்பிளை எடுத்து ஜாம்... ஜாம்... என்று இருக்கிறதை விட்டுட்டு, இப்படி உன்னிடம் இருக்கிற பணத்தை எல்லாம் செலவழித்து கலியாணம் செய்து என்னத்தைக் காணப்போகிறாய்...? ... எப்படிக் குடும்பம் நடத்தப்போகிறாய்...? ஆசை ஆறுபதுநாள். மோகம் முப்பது நாள் என்டு கேள்விப்பட்டதில்லையோ...? சும்மா முட்டாள்தனமான காரியங்களை விட்டுப் போட்டு அம்மா பார்க்கிற கலியாணத்தில் ஒன்றைப் பார்த்துச் செய்.''

ரமேஸ் தன் புத்திக்கு எட்டியவரைக்கும் புத்தி சொல்லிப்பார்த்தான். ஆனால் ராஜன் அசையவில்லை. பத்மாவின் அழகுமுகம் மறுபடியும் மறுபடியும் தோன்றி மறைந்தது. அவ்வளவுதான். ராஜனுக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்தது.

''பெண்ணாகப் பிறந்து விட்ட பாவத்திற்காக அத்தனை பெண்களும் வீடுவளவு, காசு, நகை, நட்டு எண்டு கொட்டிக் கொடுப்பதெண்டால் எங்குபோவார்கள்...?... சரி... கைநீட்டிவேண்டிய சீதனத்திற்காகவாவது அவளை நியமதியாகவாழ விடுகிறார்களா...? குடித்துக் கூத்தடித்து அத்தனையையும் கரைத்து அவளையும் கண்ணீரும் கம்பலையுமாக அலைய விடும் வீரவான்கள்தான் அதிகம்... அதைவிடு... ரமேஸ்...! இப்ப எனக்கு உதவ உன்னால் முடியுமா முடியாதா எண்டதைச் சொல்லு... முடியாவிட்டால் நான் போறன்...''

சற்றுக் கோபமாகவும் கவலையாகவும் கேட்டான் ராஜன்.

''அட...! யாரடா அந்த அழகுத்தேவதை?. நானும் கட்டாயம் பாக்கத்தான்வேணும்.'' ரமேஸுக்குக்கூட ஆர்வம் பிய்த்துக்கொண்டு கிளம்பியது. பஞ்சாங்கத்தை எடுத்துப் பார்த்தான். நல்லநாள்தான். அன்று மாலையே தன் மனைவி ராதையையும் அழைத்துக்கொண்டு பத்மாவீட்டுக்குச் சென்றுவிட்டான் ரமேஸ் அவனை வரவேற்றவளே பத்மா தான். அவளைப் பார்த்ததுமே ராஜன் பைத்தியமானதின் உண்மை நிலையை ராதையும், ரமேசும் புரிந்துகொண்டனர். உள்ளே இருந்து வந்த பத்மாவின் அம்மாவிடம் தாங்கள் யார் என்ற விவரத்தைச் சொல்லி கல்யாணப்படலத்தின் தங்கள் முதலாவது சுற்றறிக்கையை வெளியிட்டனர் ரமேஸும் ராதையும் பத்மாவின் அம்மா உள்ளுக்குள் தன் மகளின் அதிஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தாலும் சிறிது தயங்கினாள். ராதை விடவில்லை.

''அம்மா...! மாப்பிள்ளைக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. ஆனால் அவரின் தாயாரோ வைரத்தோடு நகை நட்டு எல்லாம் வேணும் என்டு பிடிவாதமாக இருக்கிறார். அந்த வசதிகள் உங்களிடம் இல்லை என்பதாலேயே பெண்ணிடம் இல்லாத நகைகளை மாப்பிள்ளையே செய்து போட முன்வந்தார், தனக்கு வரப் போகும் பெண்ணுக்கு தானே நகை போட்டு அழகு பார்ப்பதில் ஒரு தப்பும் இல்லை எண்டு நான் நினைக்கிறேன். அது மட்டுமில்லை ராஜனின் இந்த முன் மாதிரி சீதனக் கொடுமையால் தங்களின்ரை வாழ்க்கையையே கருக்கிக் கொண்டு இருக்கும் பெண்களுக்கு ஒரு மறுமலர்ச்சியாகவும் இருக்குமல்லவா......?

ராதையின் பெண் மனம் பெண்களின் விடிவுக்காக வாதாடியது. நல்ல ஒரு காரியம் நடப்பதற்காக பொய் சொல்வதால் ஒரு தவறும் இல்லையென்று வள்ளுவரே சொல்லி இருக்கிறார். எனவே கலியாணம் முடியும் வரைக்கும் மாப்பிள்ளையே பெண்ணுக்கு நகைபோடும் விஷயம் மாப்பிள்ளை வீட்டாருக்குத்தெரியாமல் இருப்பது நல்லது என்பதையும் ராதை கதையோடு கதையாகச் சொல்லி வைத்தாள்.

மாதம் ஒன்று உருண்டது. வைரத்தோடும் அட்டியலும் பெண் வீட்டுக்குப்போய்ச்சேர்ந்தது. இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தை ராஜனின் வீட்டில் அவன் அம்மாவுடன் பத்மாவின் அம்மா நடத்தினாள்.

''நீங்கள் கேட்டது போலவே வைரத்தோட்டுடன் எல்லா நகைகளும் போடக் கூடிய வசதி வந்து விட்டது. கலியாணத்துக்கு நாள் குறிக்கலாம்'' என்று பத்மாவின் அம்மா பச்சைக் கொடி காட்டினாள் இந்த வார்த்தைகளினால் பூரிப்படைந்த ராஜனின் அம்மா,

''அதுதான் ...... அண்ணன்மார் எல்லாம் வெளிநாட்டில் இருக்கும் போது பெண்ணுக்கு என்ன குறை...? கொஞ்சம் இருங்கோ. கையோடை பக்கத்து வீட்டுச் சாத்திரியாரிடம் இந்த மாதத்தில் நல்ல நாள் இருக்கிறதா எண்டு பாத்து வாறன்''

ஓட்டமும் நடையுமாகப் போனாள் ராஜனின் அம்மா லக்ஷ்மி. நாளும் குறித்தாகி அந்த மாதத்தில் திருமணமும் நடந்து விட்டது. அம்மாவின் மனம் புண்படாதபடி தான் விரும்பிய பெண்ணை மணந்ததில் ராஜனுக்கும் சந்தோஷமே.

(யாவும் கற்பனை)

- சித்திராவதி -

# உண்டேன்! உண்டேன்!! உண்டேன்!!!

ஒரு சொல்லைச் சாமர்த்தியமாகவும் நகைச்சுவை படவும் சொல்வதில் ஔவை யார்சமானமில்லாதவர். அவருடைய பாடல்கள் அமிழ்தினும் இனிமையாகத் தித்திக்கும்.

ஒருசமயம் ஔவையார் மதுரையில் பாண்டிய மன்னனுடைய திருமணத்துக்குச் சென்றார். திருமணவிழாவில் அளவிறந்த கூட்டம்; வருவோரும் போவோரும் எண்ணில் அடங்கா.

ஔவை மிகவும் எளிமையானவர். எளிமையான ஆடையே அவரை அழகுபடுத்தும். எனவே அவராடையைப்பார்த்து அரண்மனைக் காவலாளர் அவரைத் தள்ளி விட்டனர். உடையால் அவருக்கு உள்ளே செல்ல வந்தது தடை.

பார், உடையழகையே பார்க்கிறது. உளவழகைப் பார்ப்பதில்லை. சிவபெருமான் தோலாடை உடுப்பவர். திருமால் பட்டாடை உடுப்பவர். பாற்கடல் என்ன செய்தது தெரியுமா?

அது கூட ஆடம்பரத்தை விரும்புகிறது. தோலாடையுடுக்கும் சிவனுக்கு ஆலகால விடத்தை அளித்தது. பட்டாடையுடுக்கும் பரந்தாமனுக்கு தன் மகள் இலக்குமி தேவியை ஈந்தது.

எவ்வளவு கற்றறிந்தோரும் ஆடையில்லாதவிடத்து சபை நடுவே மதிக்கப்படார் என்று நையாண்டிப் புலவர் நவில்கின்றார்.

''மேலாடை இன்றிச் சபை புகுந்தால் இந்த மேதினியோர்
நூலாயிரம் படித்தாலும் எண்ணார்; நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னுடை கண்டு மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன்தனக்கே''

ஔவையார் இங்ஙனம் மக்களின் மிகுதியில் அகப்பட்டு அலைப்புண்டு உள்ளே செல்லமுடியாதவராகத் திரும்பினார்.

பாவம்! மதுரையை விட்டே புறப்பட்டுவிட்டார் ஔவையார். திருமண விழாவில் கலந்து மகிழவேண்டும், நல்லுணவு உண்டு பாண்டியனிடம் பரிசுபெற வேண்டுமென்று சில புலவர்கள் வருகின்றார்கள்.

எதிரிலே வருகின்ற தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரைக் கண்டு, ''தமிழ்த்தாயே! பாண்டிய வேந்தருடைய திருமணம் வெகு சிறப்பாக நடக்கிறதாமே? உயர்ந்த உணவுகள் படைக்கின்றார்களாமே? தாங்கள் இனிது உண்டீர்களா?'' என்று வினவினார்கள்.

அப்போது ஔவையார் அந்தப் புலவர்களைப் பார்த்து, ''ஐயன்மீர்! உண்டேன், உண்டேன், உண்டேன்'' என்று மூன்று முறை நீளமாகக் கூறினர்.

''என்னம்மா! மிக்க நீளமாக உண்டேன், உண்டேன், உண்டேன் என்று மும்முறை மொழிந்தீரே? உணவு நிரம்பப்பலமோ? நீரும் நிரம்ப உண்டீரோ?'' என்றார்கள் புலவர்கள்.

ஐயன்மீர்! தெளிந்த தமிழில் வல்ல பாண்டிய மன்னருடைய மகத்தான திருமணத்தில் நான் உண்ட உயர்வை உரைக்க வேண்டுமா? நெருக்குண்டேன்; தள்ளுண்டேன், நீள்பசியால் கருக்குண்டேன்'' என்றார் அம்மையார்.

இப்பொருள்கள் அடங்கிய அருமைப்பாடல் இதோ உள்ளது.

''வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்''

எவ்வளவு அழகாக நளினமாகக் கூறிவிட்டார். தும்பிமுகன் ஔவைக்குக் கொடுத்த கொடைதான் என்னே!

- கு. குகரட்கன் -

# நல்லதொரு தமிழ்ப்பணி

படிமுறையான விளக்கங்களைக் கொண்ட 12 பயிற்சிகள் ஒவ்வொரு வகுப்புத் தமிழ் மாணவனுக்கும். தேவைப்படும் இலக்கணத்தத்துவங்கள் நெஞ்சிற் பதிக்கும் வகையில் கவர்ச்சியான தெளிவான முறையில் இலக்கணப் பூங்கா இரண்டாம் பதிப்பில் இடம்பெற்றுள்ளன.

இந்நூலின் ஒவ்வொரு இலக்கண விடயத்தையும் அனுபவ அடிப்படையில் தர்க்க ரீதியாக-இரத்தினச் சுருக்கமாக-பொறுப்புணர்ச்சியோடு விளக்கியுள்ளார் நூலாசிரியர்.

இந்நூலில் இடம்பெறும் உதாரணங்களில் பெரும்பாலானவை -தற்கால வழக்கில் மாணவரின் அனுபவப் பரப்புக்குட்பட்ட நவீன உதாரணங்களாக அமைந்திருப்பது சற்றும் மாணவர்க்கு மன உற்சாகத்தையும் ஆர்வமுடன் அதனை ஆராய்ந்து பார்க்கும் மனக்கிளர்வையும் (curiosity) உண்டாக்குகிறது.

வரைவிலக்கணங்களை-இலக்கண சூத்திரங்களை மனனஞ் செய்துதான் இலக்கண அறிவை பேண ...

இருந்துவந்த மரபை விட்டொழித்து அலசி ஆராய்ந்து நியாயித்துக் கற்பதன் மூலமே சுலபமாக ஒரு விடயத்தை மனதில் சிரஞ்சீவியாக நிலைபெறுத்த முடியும் என்று நிரூபிக்கப்படுகிறது இலக்கணப் பூங்காவில்!

ஆயினும் முக்கியத்துவம் வாய்ந்த இலக்கணச் சூத்திரங்கள் சிலவற்றையாவது அவசியம் மனனஞ் செய்து கொள்வது இலக்கண அறிவுக்கு முதுகெலும்பு போன்றது என்பதும் உண்மை.

இந்தப் பதிப்பில் விசேடமாக - மேலதிகமாகக் கவிதையாப்பு எளிய - இனியவடிவத்தில் ''ப்பூ! கவிதை இலக்கணம் இவ்வளவுதானா? இத்தனை காலமும் இதைப்படித்து கொள்ளாமல் இருந்தேனே' என ...

கட்டுரை எழுதுவது எப்படி, சுருக்கம எழுதுவது எப்படி, கடித இலட்சணங்கள் அத்தனையும் அமையக் கடிதம் எழுதுவது எப்படி என 10 ஆம் வகுப்பு மாணவனைக்கருத்தில் கொண்டு விளக்கந் தருவதும் உயர்தரத் தமிழ்ப்பாட மாணவனைப் பூரணமாக்கும் அளவுக்கு தமிழ் இலக்கணத்தைப் பிழிவாக வழங்கியிருப்பதும் நல்ல தமிழ்ப்பணி என்றே சொல்ல வேண்டும்.

இந்நூல் மாணவர்களுக்கு எல்லா வகுப்புகளிலும் தமிழ்ப்பாடத்தில் அதிக புள்ளிகளைச் சம்பாதிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

பண்டிதர்கள் வித்துவான்கள் தமிழ் விசேட பட்டதாரிகள் போதியளவு இல்லாத காரணத்தால் குறைந்த தராதரமுடையோரும் தமிழ் மொழியைக் கற்பிக்கும் அவலநிலை இன்றுள்ளதால் இலக்கணப் பூங்காவை இவ்வகையினர் அவசியம் படித்துக் கொள்வதன் மூலம் தமிழ்ப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

எதிர்காலத் தமிழ் மாணவரின் மொழிக் கல்வி சிறப்படைய இந்நூலை ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் மேலோட்டமாகவாவது பார்ப்பார்களாக. ★

நூல்: தமிழ் இலக்கணப் பூங்கா.
ஆசிரியர்: பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
வெளியீடு: பொன்னெழுத்துப் பதிப்பகம், இணுவில்.
விமர்சனம்: புலவர் சி. செ. சோமசுந்தரம்
விலை: ரூபா 16/75




# குதூகல உலகு

பரதேசி எனும் ஒரு சொல்லை — பர
லோகத்தி னுக்கனுப் பாவிடில் தொல்லை
இரக்கின்ற சனங்கள் தம்மை — இனி
இல்லாது செய்திட்டால் உலகுய்யும் உண்மை
எல்லோர்க்கும் எந்நாடும் சொந்தம் — இது
எல்லோர்க்கும் அன்பாலே உண்டான பந்தம்
நாடிநரம்பெல்லாம் நன்மை — மனம்
நல்லோர்கள் நல்வார்த்தை எல்லாமே பண்மை
கூட்டைத்திறந்ததும் கிள்ளை — பெறும்
குதூகலத் திற்கேதும் ஈடிணை இல்லை.
பாடித்தி ரிந்திடும் புட்கள் — தமைப்
போன்றவரே உலக சுத்தது மக்கள்.
தேடித்தி ரிந்திடு வார்கள் — நற்
சுதந்திர மேஅவர் அடிப்படை வேர்கள்
அன்புற்ற உள்ளங்கள் வாழும் — அது
இல்லாத(து) இங்கேயே நரகத்தில் வீழும்
வாருங்கள் அன்பாலே சூழ்வோம் — உயர்
வாய்மையின் கால்களில் முடிசாய்த்து வீழ்வோம்.

- ஜெபன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் புதுடில்லிப் பயணம்!

# புதியபாதையை தோற்றுவிக்குமா?

யாத்திரையின் நோக்கம் என்ன?

யாத்திரைகளில் பல வகை உண்டு.

தல யாத்திரை, மனதைத் தூய்மைப் படுத்துவது.

அரசியல் யாத்திரை, சில அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வது.

'பாதய'த்திரை'யின் பலனைத்தான் அண்மையில் தர்மிஷ்டர் மனந்

## உள்ளும் புறமும்

- குறுமுனி -

திறந்து சொல்லி விட்டார்.

''எமது இன்றைய பிரச்சினைகளுக்குக் காரணம் நாம் விட்ட தவறுகளே; வெளிநாட்டார் அல்லர்'' இப்படி அழாக் குறையாக கூட்டம் ஒன்றில் தர்மிஷ்டர் சொன்னார்.

'பாதயாத்திரை' பாதை மாறியதினால் ஏற்பட்ட பலன்கள் 30 ஆண்டுகளின் பின்னர் அவரைப் இப்படிப் பேச வைத்தது.

பெறுபேறு, அயல் நாட்டுக்கு அடிக்கடி அரசியல் யாத்திரையை மேற்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டது.

கடைசியாகக் கடந்த வாரம் காமினியும் அரசியல் யாத்திரை மேற்கொண்டார்.

கொத்மலையில் பிறந்த அவர் திருமலை பற்றிப் பேசவே இந்த அரசியல் யாத்திரையை மேற்கொள்ள தர்மிஷ்டரால் அனுப்பப்பட்டார்.

கேட்டது கிடைத்து விட்டது என்று திரும்பி வந்தவுடன் அவருக்கு 47ஆவது வயதும் பிறந்து விட்டது.

கொழும்புப் பத்திரிகைகள் அவரின் பிறந்த தினம்பற்றி பத்திபத்தியாக எழுதின.

அவரது இமேஜைக் கட்டியெழுப்பும் பணி கொழும்பு வட்டாரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது என்று ஒரு செய்தி.

நினைப்பது நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இது நடைபெறுகின்றது.

நினைப்பது நடக்குமா? என்பது கேள்வி.

இதனிடையில் பிரதமர் பிரேமதாஸா அடுத்தவாரம் இந்தியாவுக்கு யாத்திரைபோகின்றார் என்று செய்தி வந்திருக்கின்றது.

ஐ. நா. வீடமைப்புத் திட்ட மாநாடு ஒன்று புதுடில்லியில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதில் சிறப்புரை ஆற்ற வரும்படி பிரதமர் அழைக்கப்பட்டிருக்கின்றார்.

ஐ. நா. ஸ்தாபனம் அழைப்பை அனுப்பியுள்ளது.

அதை ஏற்று அவர் செல்கின்றார். ஆனால் ஐ. நா. மாநாடு நடக்கும் நாடு பிரதமருக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளும்படி அழைப்பு அனுப்பி இருப்பதாக பொதுசனத் தொடர்பு சாதனங்கள் இன்னும் தெரிவிக்கவில்லை இனித் தெரிவிக்குமோ, என்னவோ.

ஆனால் பிரதமர் இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நேராக நேபாளம் செல்கின்றார். அந்த நாடு பிரதமருக்கு உத்தியோக பூர்வ அழைப்பை அனுப்பியிருக்கின்றது.

நேபாள அரசுடன் பிரதமர் பிரேமதாஸ தெற்காசியப் பிரச்சினைகள்- பயங்கரவாதம் உட்பட - அனைத்தையும் பேசுவார் என்று காட்மண்டுவில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் பிரதமர் 20 தினங்களை இந்திய, நேபாள நாடுகளில் தல யாத்திரையில் கழிப்பார் என்று இன்னொரு செய்தி தெரிவிக்கின்றது.

முக்கியமான விஷயம் என்னவென்றால், பிரதமர் பிரேமதாஸ புதுடில்லியில் இறங்கும்போது ராஜீவ் காந்தியால் வரவேற்கப் படுவாரா?

அல்லது கடந்த ஜூலை 29 இல் கொழும்பில் பிரேமதாஸ ஒதுங்கியிருந்தது போல் புதுடில்லியில் ராஜீவ்காந்தியும் ஒதுங்கியிருந்து விடுவாரா? பிரதமர் பிரேமதாஸ ஒப்பந்தத்துக்கு முன்னரும் ஒப்பந்தத்திற்குப் பின்னரும் காட்டிய இந்திய எதிர்ப்பு உலகறிந்ததே

இந்த நிலையில் புதுடில்லி போய் இறங்கப் போகும் பிரதமருக்கு எப்படியான வரவேற்பு கிடைக்கும்?

தல யாத்திரை அவரின் மனதை மாற்றுமா?

'சின்னச் சின்ன வீடு கட்டி சிங்கார (ஜனாதிபதி) வீடு கட்டும்' திட்டத்துக்கு புதுடில்லி பயணம் உதவுமா?

இப்பயணத்தில் ராஜீவும் பிரேமாவும் 'நேசர்'மாகி விடுவரா?

அல்லது இப்பயணமே திடீரென்று ரத்தாகி விடுமா? இக்கேள்விகளுக்கான பதில்களை பொறுத்திருந்து பார்ப்போம்!

★

# சர்வதேச மாநாட்டு யோசனை: இஸ்ரவேல் எதிர்ப்பது ஏன்?

கடந்த டிசம்பர் 9 ஆம் திகதி ஜோர்தானின் மேற்குக் கரையிலும் காஸாவிலும் ஆரம்பமான இஸ்ரவேல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் படிப்படியாக உக்கிரமம் அடையும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

அண்டை அரபு நாடுகளுடன் இஸ்ரவேல் சமாதான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கோரி இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமான தினத்திலிருந்து இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரவேல் தரப்பிலும் இவ்வாரம் முதற்தடவையாக இராணுவ வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்ரவேல் படையினர்மீது பெற்றோல் குண்டுகள் வீசப்படும் சம்பவங்கள் இந்த நெருக்கடி உக்கிரம் அடைந்து வருவதற்கு அறிகுறி ஆகும்.

பெற்றோல் குண்டு எப்பகுதியில் இருந்து வீசப்படுகிறதோ அந்தப் பகுதி வீடுகளைத் தரை மட்டமாக்கும் அடாவடித்தனத்தில் இஸ்ரவேல் படைகள் தற்போது ஈடுபட்டுவருகின்றன.

ஜோர்தானின் மேற்குக் கரையும், காஸாவும் 1967 ஜூனில் நடந்த 6நாள் யுத்தத்தின்போது இஸ்ரவேலின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

ஜோர்தானின் மேற்குக்கரை ஜோர்தான் வசமும் காஸா எகிப்து வசமும் இருந்தன.

இந்த 6நாள் யுத்தத்தில் இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட ஏனைய பகுதிகள் எகிப்தைச் சேர்ந்த இறைஸ் பாலைவனமும் சிரியாவைச் சேர்ந்த கோலன்மேட்டு நிலமும் ஆகும்.

20 வருடங்கள் கழிந்தும் இந்தப் பிரச்சினை இன்றும் போராட்ட நிலையிலேயே இருந்து வருகிறது.

**உலக உலா**

ஏன்.பி.சீலன்

எனினும் இஸ்ரவேலின் கட்டுப்பாட்டில் உள்ள எகிப்திய பிரதேசங்கள் தொடர்பாக சில ஆண்டுகளுக்கு முன் கைச்சாத்தான கார்ட்டர் - பெகின் - சாதாத் உடன்பாடும் இஸ்ரவேலின் எல்லையில் உள்ள அரபு நாடுகளில் பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸிர் அரபாத்தின் ஆயுதப் போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டதும் இஸ்ரவேலுக்கு எதிரான அரபு உலகின் போராட்டத்தை வலுவிலக்கச் செய்திருந்தன.

### சர்வதேசமாநாடு

தற்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தெரிவிக்கப்பட்டிருக்கும் யோசனை சர்வதேச மாநாடு ஒன்றைக் கூட்டிப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதே.

முன்னைய யோசனைகள் போல் அன்றி இந்த யோசனைக்கு அமெரிக்கா - சோவியத் யூனியன் போன்ற நாடுகளின் ஆதரவும் இருந்து வருகிறது.

ஆனால் இஸ்ரவேல் இந்த யோசனையை எதிர்த்து வருகிறது.

சர்வதேச மாநாட்டு யோசனையை ஏற்றால் அது தற்கொலைக்கு ஒப்பாகும் என்று இஸ்ரவேல் பிரதமர் ஷாமீர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு விஜயம் செய்து அதிபர் றேகனையும், வெளிவிவகார அமைச்சர் சூல்ட்ஸையும் சந்தித்த பின்னரே பிரதமர் ஷாமீர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இஸ்ரவேலுடன் அரபு நாடுகள் நேரடிப் பேச்சு நடத்த வேண்டும் என்றும் நேரடிப் பேச்சுக் கோரிக்கையைத் திசை திருப்பும் நடவடிக்கையே இந்த சர்வதேச மாநாட்டு யோசனை என்றும் பிரதமர் ஷாமீர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

1967ஜூன் யுத்தத்தில் இஸ்ரவேலினால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து இஸ்ரவேல் தனது படைகளை விலக்கிக் கொள்ளவேண்டும் என்ற ஐ. நா. தீர்மானத்தைப் போன்று இன்னொரு தீர்மானத்தை நிறைவேற்றி இஸ்ரவேலை நிர்ப்பந்திப்பதே சர்வதேச மாநாட்டின் நோக்கமாக இருக்கும் என்று இஸ்ரவேல் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டப்படும் சர்வதேச மாநாடு ஒரு மினி ஐ. நா மாநாடாக மாறி இஸ்ரவேலுக்கு எதிராக புதிய நிர்ப்பந்தங்களை உருவாக்கலாம் என்று இஸ்ரவேல் - தலைவர்கள் கருதுகின்றனர்.

### தனிநாடு

காஸாவிலோ அல்லது ஜோர்தானின் மேற்குக் கரையிலோ பாலஸ்தீனர்களுக்கு என்று ஒரு தனிநாடு உருவாகி அரபுநாடுகள் எங்கும் சிதறிவாழும் பாலஸ்தீன அகதிகளுக்கு ஒரு நிரந்தர தாயகம் உருவாக்கப்படும் வரை இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பது அரிது.

எனினும் இஸ்ரவேலின் எல்லையில் இப்படியான ஒருதனிநாட்டை பாலஸ்தீனர்களுக்கு உருவாக்குவது காலப் போக்கில் இஸ்ரவேலின் அழிவுக்கு வழிவகுக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைக்கும் வரை இப்படியான ஒரு [illegible] இஸ்ரவேல் ஏற்குமா [illegible]

★


**Jaffna English Academy**

(A LUX IN TENEBRIS)

**G.C.E.(O.L.) ENGLISH**

If you want to come off with flying colours in English at the G. C. E. (Ordinary Level) December, 1988 Examination, please take the first step in the right direction by coming to us.

COMMENCEMENT: 24th March, 1988. Classes on Saturdays from 8-30 a. m to 10 a. m. and on Thursdays from 3-30 p. m. to 5 p. m.

FEES: Rs. 35/- per month.

LECTURES: KANDIAH NAVARENDRAN

9, றக்கா ஒழுங்கை.

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்



★ வாருங்கள்!

கற்றுக்கொள்ளுங்கள்!!

**வேதாகமப் பாடங்கள்**

1. இரட்சணியம்
2. பரிசுத்த ஆவியானவர்

மேற்கூறிய பாடங்கள் யாழ் / சீயோன் வேதாகம பாடசாலையினரால் நடத்தப்பட உள்ளது கற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் 5-4-88க்கு முன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

காலம்:- சித்திரை 18 முதல் 22 வரை

நேரம்:- 9-00 முதல் 1-00 வரை

இடம்:- யாழ் சீயோன் தேவாலயம்

அதிபர்

சீயோன் வேதாகம பாடசாலை

30, கோவில் வீதி, யாழ்ப்பாணம்



**வழங்குனரைப் பதிவு செய்தல் - 1988**

பனை அபிவிருத்திச்சபைக்கு 1988ம் ஆண்டு பனைசார் உற்பத்திப் பொருட்கள் பிரதேச உற்பத்திப்பொருட்கள் போன்றவற்றைத் தொடர்ச்சியாக வழங்கக் கூடிய வழங்குனர்களிடமிருந்தும், உற்பத்திச் சங்கங்களிடமிருந்தும் வழங்குனர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன,

விண்ணப்பப்படிவங்களைச் சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர், சந்தைப்படுத்தும்பகுதி, இல. 53, கண்டி வீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி 20 - 4 - 1988.

தலைவர்,

பனை அபிவிருத்திச் சபை.



**பிரதேச உற்பத்திப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல் - 1988**

சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்வதற்கு தரமான பிரதேச உற்பத்திப்பொருட்களுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை பற்றிய முழு விபரத்தையும் விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக் கொள்வதற்கு சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர், சந்தைப்படுத்தும் பகுதி, இல. 53, கண்டிவீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் 20-4-1988 ம் திகதிக்குபிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,

பனை அபிவிருத்திச் சபை.



**FITNESS CERTIFICATE**

1988ஆம் ஆண்டுக்கான வாகனத் தகைமைச் சான்றிதழ் தெல்லி எஞ்ஜினியரிங் இன்டஸ்றீஸ் உரிமையாளரினால் வழங்கப்பட்டு வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**Telli Engineering Industries**

Main Road :: Tellippalai.

தெல்லி எஞ்ஜினியரிங் இன்டஸ்றீஸ்

பிரதான வீதி :: தெல்லிப்பளை

(2677)



**1ம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 8 - 4 - 1925

மறைவு 7 - 4 - 1987

திதி 26 - 3 - 1988

**திரு. வே. க, மாசிலாமணி**

(முன்னாள் திறைசேரியில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும் ''ரேட்டறி பிரின்டிங் ரேட்ஸ்'' உரிமையாளர்)

தரணியில் நாளும் போதும், தனக்கென வாழ்ந்திடாது, மக்கள் சேவையே மகேசன் சேவையென மதித்து, இன்முகம் காட்டி, இன்சொல் பேசி, அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாக வாழ்ந்து, எங்கள் வாழ்வு ஒளிமயமாக வேண்டும் என விரும்பி முயற்சி செய்த நீங்கள் மறைந்தோ பன்னிரு திங்கள் கடந்து விட்டது ஐயா. எங்கள் அனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்டு விட்டீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள்

76/2 (110) புங்கன்குளம் வீதி,

கொழும்புத்துறை,

யாழ்ப்பாணம். (2164)



**ஈராண்டு நினைவஞ்சலி**



மலர்வு 1959 - 3 - 5

உதிர்வு 1986 - 3 - 20

திதி 1988 - 3 - 26

அமரர் பொன்னம்பலம் குகதாஸ்

வனமழித்து வளமாக்கி
வியர்வைதனை உரமாக்கி
பணிசிறக்க மனநினைந்து
மருவிய ஈர்செல்வங்கள்
கொற்றரக்கர் கொடுவினையில்
கொள்ளிவைத்து சிதைந்தனவோ



மலர்வு 1965 - 6 - 3

உதிர்வு 1986 - 3 - 20

திதி 1988 - 3 - 26

அமரர் பொன்னம்பலம் வைத்திஸ்வரன்

இருளாய் ஈராண்டு
ஒளியின்றி ஓடினவோ
ஆறுமோ எம்நெஞ்சு
ஐயா! உங்கள் நினைவு

ஆத்ம சாந்திக்காக ஆண்டவனை வேண்டும்
பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

வட்டவளவு,
இடைக்காடு,
அச்சுவேலி. (2170)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் பெறுமதியானது

துரித சலவைக்கும், பளிச்சிடும் வெண்மைக்கும்
"மில்க்வைற் சலவைப்பவுடர்"
வாங்கி உபயோகியுங்கள்.
பாவித்த 25 உறைகளை அனுப்பி அழகிய
"கைலேஞ்சி"
ஒன்றை பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

26 - 03 -1988 சனிக்கிழமை



மில்க்வைற் ஆதரவாளர்களுக்கு
பணிவான வேண்டுகோள்!

உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தினால், எங்கள் தயாரிப்பான, நீம் சுகாதாரத் தூபம், ஒலிவ் ஸ்நானப் பவுடர்களின் விலையைச் சிறிது கூட்டவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

புதிய விலை - ஒரு பக்கட்
75 சதம் மட்டுமே!

மில்க்வைற் — யாழ்ப்பாணம்



## Modern Brighton Science Academy

VADDUKODDAI

(யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமையில்)

YEAR II விறுவிடை வகுப்புகள்

விஞ்ஞானம்: J. R சூரி

ஆரம்பம்: 27-03-88 Sun 1.45 p.m.

புதிய வகுப்புகள்: YEAR 10 & 11

ஆரம்பம்; 27-03-88 Sun. 2 45 p.m.


## வெற்றுச் சாக்கு விற்பனை

இச் சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா. 10/- மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்திப் பெறும் கேள்விப் பத்திரங்களை, மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா. 100/- சங்கத்தில் செலுத்தி, 30 3 88 க்குப் பிந்தாமல் எம்மிடம் நேரில் கையளிக்க வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கட்டைவேலி- நெல்லியடி,
ப. நோ. கூ சங்கம்.

சரவெட்டி,
24-3-88


## கலண்டர்
## பாவனையாளர்களுக்கோர் ஒப்பற்ற சிறப்புச் செய்தி

இன்று கண் கண்ட தெய்வமாக விளங்கும்
**காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி**
**சங்கராச்சாரிய சுவாமிகள்**

எமது 1988ஆம் ஆண்டு தயாரிப்பான அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டரை ஆசீர்வதித்து தமது சன்னிதானத்தில் மிக்க மகிழ்வுடன் ஏற்றுள்ளார்கள். அத்துடன் 1989ஆம் ஆண்டு வெளியாகும் கலண்டரில் பாவனையாளர்கள் கைக்கொள்ள வேண்டியதும் நீக்க வேண்டியதுமான பல விபரங்களையும் புகுத்துமாறு அருளியுள்ளார்கள்.

அதற்கேற்ப அடுத்தாண்டு பாவனைக்கு வெளிவரும்.

அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்
அஷ்டலக்ஷ்மி வாரத்தாள் கலண்டர்
டெஸ்க் டயறி, மினிடயறி

என்பன வெளியாகும் என்பதை தெரிவிப்பதில் மிக்க மன நிறைவு கொள்கிறோம்

**ASHTRALAXMI COMBINES**

த. பெ. 1 :: கைதடி.


## நீத்தார் பட்டியல்

### பொன்னையா சரவணமுத்து

(யூனியன் பேக்கரி உரிமையாளர், சாவகச்சேரி)

சாவகச்சேரி, யூனியன் பேக்கரி உரிமையாளர் திரு. பொன்னையா சரவணமுத்து அவர்கள் 24-3-88) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசமலர், பத்மநாதன், துரைச்சாமி (Railway Guard), கமலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், தியாகராசா, உமாதேவி, சிதம்பரேஸ்வரி, நாகராசா (Ceylon Tobacco company) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் கார்த்திகேசு, திருமதி. நாகரத்தினம் பரமநாதர், குமாரசாமி (Red Auditor), ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சுமதி கந்தசாமி, கெங்காதேவி, இராதா கிருஷ்ணன், சுரேஸ், சுபோதினி, தர்சினி, குகதாஸ், கீதா, சீதா, கோணேஸ்வரன், கவிதா, சுகிந்தன், ஜெயந்தன் இராகுலன், அருந்ததி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் சாவகச்சேரியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக (26-3-88) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

உறவினர்களும், நண்பர்களும் இத் தகவலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

த துரைச்சாமி

(2690)


## வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி

எங்களிடம் கீழ்க்கண்ட எல்லாவகையான கணக்கு பதிவுப் புத்தகங்களையும் மற்றும் பாடசாலை உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்

1. பற்று வரவு பதிவுப் புத்தகம்
2. பெற்றிக் காஸ் (காசு) புத்தகம்
3. ஸ்ரொக் புத்தகம்
4. வங்கி கணக்கு பதிவுப் புத்தகம்
5. நகைக் கடை இருப்புப் பார்க்கும் புத்தகம்
6. மூன்று கலம்ஸ் (மூன்றுநிரல்) போட்ட கணக்குப் பதியும் புத்தம்.

**பேப்பர் மேர்ச்சன்ட்**
107, பவர் கவுஸ்ரோட்
யாழ்ப்பாணம்.

தலைமையகம்
**பெற்று எசன் சப்பிளையர்ஸ்**
223, பவகவுஸ் ரோட்,
யாழ்ப்பாணம்.



## விசேட அறிவித்தல்

### வெளிவாரி பட்டமாணிப் பரீட்சைகள் விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது

G.A.Q. (B.A)பாடநெறிக்கு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 30ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

G. C. E. A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

பதிவுகள் அனைத்தும் நிறுவனத்தினால் செய்து தரப்படும். இதுவரை பதிவு செய்யாதவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

3ஆம் பிரிவிற்கான பயிற்சிவகுப்புகள்
ஆரம்பம் 2 - 4 - 88

பதிவாளர்:

**ASTAN INSTITUTE**

166/1 Hospital Road, JAFFNA

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)


### திருமதி பார்வதிப்பிள்ளை சண்முகம் (மாணிக்கம்)

உசன், மிருசுவில்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**26-03-1988**

எங்கள் மேல் உயிருக்கு உயிராகவும்,
அன்பின் சிகரமாகவும், பாசத்தின்
உறைவிடமாகவும் இருந்து நற்பணி செய்து
எம்மையெல்லாம் வாழவைத்த
ச. பார்வதிப்பிள்ளை அவர்கள்



மண்ணுலகில்: 15-7-1922 விண்ணுலகில்: 25-2-1988

சண்முகத்தின் அன்பு மனைவியும், புஸ்பராசா, தயானந்தசோதி. இராசநாயகம், சிவதாஸ், புவனேஸ்வரி, புஸ்பராணி, கௌரி ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அமரத்துவம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட யாவர்க்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் 26-03-1988 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்

### நாகலிங்கம் இராமநாதர்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நாகலிங்கம் இராமநாதர் காலமாகிவிட்டார். அன்னார் கமலத்தின் அன்புக் கணவரும், சரோஜா, யோகமலர், ரவீந்திரன் (ஓமான்), இரத்தினராசா (போதனா வைத்தியசாலை, யாழ்நகர்) ஆகியோரின் அருமைத் தந்தையும் பத்தினி, கந்தப்பு, கனகராசா (பதிவாளர், நெடுந்தீவு). பொன்னம்மா, காமாட்சி ஆகியோரின் மைத்துனரும், நாகம்மாவின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (25-3-88) வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

மனைவி, மக்கள்

(2689)

### கனகசபை சிவப்பிரகாசம்

1988-03-22 அன்று கொக்குவிலில் காலமானார். அவர் அளவெட்டி காலம் சென்ற கனகசபை, நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரும், பத்மா தேவியின் அன்புக் கணவரும், சிவதேவியின் அன்புத் தந்தையும், அளவெட்டி தவப்பிரகாசத்தின் அன்புச் சகோதரருமாவார். அவரது ஈமக்கிரியைகள் 1988-03-23ல் அவரது கொக்குவில் இல்லத்தில் நடந்தது என்பதனை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உப தபால் கந்தோர் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. கொக்குவில். — மனைவி, மகள், சகோதரர்கள்


## பிரயாண ஒழுங்குகள்

### Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | AUTO இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 2. | கனரக வாகன சாரதிகள் | — | 650 SR |
| 3. | LUBE தொழில் நிபுணர் | — | 750 SR |
| 4. | கனரக சாதன இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 5. | மோட்டார் REWIND நிபுணர் | — | 750 SR |
| 6. | AUTO A/C தொழில் நிபுணர் | — | 850 SR |
| 7. | தகர வேலைக்காரர் | — | 700 SR |
| 8. | AUTO மின்சாரத் தொழிலாளி | — | 700 SR |
| 9. | Wheel Balance and Align Specialist | — | 800 SR |
| 10. | வர்ணம் தீட்டுவோர் | — | 650 SR |
| 11. | தட்டு, முட்டு, மெத்தை உறை போன்ற சாதனங்கள் அளிப்பவரின் தொழிலாளி | — | 800 SR |
| 12. | சுருதியை அதிகரிக்கச் செய்யும் நிபுணர் | — | 800 SR |
| 13. | கமாஸ்தா | — | 650 SR |
| 14. | Plumber (காரியத்தினால் குழாய்கள், தொட்டிகள் சீர் செய்பவர்) | — | 650 SR |
| 15. | Welders | — | 650 SR |
| 16. | கடைச்சல் இயந்திர தொழில் நிபுணர் | — | 700 SR |
| 17. | தச்சு வேலைக்காரர் (Carpenters) | — | 650 SR |
| 18. | மேசன் (Masons) | — | 650 SR |
| 19. | இயந்திர பொறியியலாளர் | — | 2200 SR |
| 20. | மின்னியல் ,, | — | 2500 SR |
| 21. | மின்பட வரைஞர்(Electrical Draughtsman) | — | 1500 SR |
| 22. | Electrictans (மின்சார தொழிலாளி) | — | 700 SR |
| 23. | குளிரூட்டியியல் தொழில் நிபுணர் | — | 800 SR |
| 24. | Secretary / Typist | — | 800 SR |
| 25. | Telex Operator | — | 800 SR |
| 26. | தோட்டக்காரர் Gardeners | — | 350 SR |
| 27. | துப்புரவாக்கிகள் | — | 350 SR |

முக்கிய குறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4-88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை செய்ய சமுகம் அளிக்க வேண்டும். அதன்பின் ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். இதற்குத் தேவையானவை பின் வருவன:-

வயதெல்லை 21—50 வரை

1. Pass port கடவுச் சீட்டு
2. மூன்று (3) பாஸ்போட் சைஸ் படம்
3. வேலைசெய்த தொழில் சான்றிதழ்

இவையாவும் கொண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

### 2. Kuwait Cleaners 30 KD

Age 18 — 48 வரை

மற்றும் Kuwait, Singapore, Abudhabi ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பணிப்பெண்கள் (House Maid) தேவை.

போக விரும்புவோர் உடன் 1 முழுக் கலர் படம், 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் தொடர்பு கொள்ளவும். போக விரும்பும் யாவரும் எமது காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,

**T. V. TRAVELS**

**BROWN ROAD :: KOKUVIL.**


## அவர்கள் வெளியே வந்தனர்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

காங்கேசன்துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியே வந்த ஸ்ரீலங்கா படையினர் லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன காரியாலயம் வரை சென்றனர்.

ஜீப் வண்டி ஒன்றில் ஆயுதபாணிகளாக உயரதிகாரி ஒருவர் உட்பட ஐந்து சிப்பாய்கள் முகாமில் இருந்து வெளியே வந்தனர்.

லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபன முகாமையாளரைச் சந்தித்துப் பேசிவிட்டு மீண்டும் அவர்கள் முகாமுக்குச் சென்றனர்.

(ஒ-10)

## பிரமுகர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோர்கள் ஆகியோர் அடங்கியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இக்குழுவின் சந்திப்பினையடுத்தே மேற்படி பரீட்சை சம்பந்தமான உத்தியோக பூர்வ அறிவிப்பு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட உள்ளதாகவும் நம்பகரமாக அறியவருகிறது.

இது வரையில் கல்வி அமைச்சு உத்தியோக பூர்வமாக பரீட்சை நடைபெறும் என்றோ, நடைபெறாது என்றோ எதுவித அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-9)

## அவசர - - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமூக பொருளாதாரத் துறைகளுக்கு மட்டுமல்லாமல் ... சாலப் பொருத்தமாகும்.

## நீத்தார் பட்டியல்

### திருமதி. உமாபதி (உமா) விக்கினேஸ்வரன் (தவம்)

நாவற்குழியைச் சேர்ந்த திருமதி. உமாபதி விக்னேஸ்வரன் (21-3-88) திங்களன்று காலமாகிவிட்டார். அன்னார் ஆறுமுகம் விக்கினேஸ்வரனின் (தவம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா, இராசம்மா சந்தையா ஆகியோரின் அன்பு மகளும், மகேஸ்வரனின் (சவூதி அரேபியா) அன்புச்சகோதரியும், கலா மகேஸ்வரனின் மைத்துனியும் ஆறுமுகம், உத்தமி ஆறுமுகம் ஆகியோரின் மருமகளும் ஆவார்,

அன்னாரின் ஈமக்கிரியை சனிக்கிழமை (26-3-88) 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தகவல்:

நாவற்குழி, கைதடி — ஆ. விக்கினேஸ்வரன் (தவம்)

(2192)

### திருமதி தங்கம்மா தில்லையம்பலம்

இணுவிலைச் சேர்ந்த திருமதி தங்கம்மா தில்லையபலம் 25-3-88 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் சந்திரபவானி (தொழில் உத்தியோகத்தர் கொழும்பு) ஏகாம்பரநாதன் (சவுதி) விஜயநாதன் (ஆசிரியர் நயினாதீவு) யோகநாதன் விஜயகுணராணி (ஆசிரியை, கிளிநொச்சி) யோகேஸ்வரி (ஆசிரியை இளவாலை) இந்திரகுமாரி (இலங்கைவங்கி காங்கேசன்துறை) ராஜகுமாரி, தயானந்தராசா (சவுதி) ராஜபவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமசாமி, (ஆசிரியர்) சுசீலா தேவி ராஜேஸ்வரி, மஞ்சுளா (ஆசிரியை, இணுவில்) பஞ்சலிங்கம், மண்டலநாயகம்(Peninsula Group நாவற்குழி) தவரட்ணராஜா (தபால் அதிபர் இளவாலை யோகர் ஆகியோரின் அருமை மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். தகவல்:-

திருமதி இ. மண்டலநாயகம் மகன்,


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்)லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ளஅவர்களது அச்சகத்தில் 26-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Pblicationsn (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Saturday, 26th March 1988.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org